# புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ பிப்ரவரி ௴ 22௳ [ந. 32.

பிரஸங்கம் XXXII.

## வர்த்தகமும் யுத்த அபாயமும்.

1. அடிக்கடி இந்த சொற்றொடர்கள் பிரயோகப்படுத்தப்படுகின்றன: காமன்ஸ் சபையில் ‘ருஷ்யாவுக்கு அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி’; ‘ஜப்பானில் அரிசி அளந்து கொடுக்கப்படுகிறது’; ‘தூரத்து கிழக்கு மகாநாடு டில்லியில் கூடுகிறது’; ‘ஹிட்லர் 1918-ம் ௵த்தில் ஜெர்மானியர்கள் மொத்தத்தில் தோற்கவில்லை, பட்டினியால் சரணடையவேண்டி வந்தது’; இம்மாதிரி பல தொடர்களும் வழங்குகின்றன.

2. இக்கட்டுரையில் இதுபோன்ற விஷயங்களைக் குறித்து ஏன் பத்திரிகைகள் இவ்வளவு எழுதுகின்றன, ஏன் பொது ஜனங்கள் இவ்வளவு வாதிக்கிறார்கள், என்பதைப்பற்றி எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

3. வியாபாரம்தான் நாடுகளின் உயிர் ரத்தம். உலகில் ஒருதேசமும் பிறதேசப்பொருள்களை எதிர் பாராமல் தன்னந்தனியே சமாளிக்க முடியாது. ஒவ்வொரு நாடும் காசு கொடுத்தோ கடனுக்கோ வெளிநாடுகளில் வாங்கவேண்டியதுதான், அல்லது தன் சாமான்களை சாமான்களுக்காக பரிவர்த்தனையாவது செய்யவேண்டும். வாங்குவதைவிட ஜாஸ்தி அது விற்றால், அதன் பொருள் நிலைமை வலு. இம்மாதிரி இரண்டு தேசங்கள் இருக்குமாகில், அவைகளுக்குள் ஸ்பர்த்தை ஏற்படுகிறது. இது சமாதான முறையில் இருக்கலாம்; அல்லது இந்தியாவில் போர்ச்சுகீஸூம், பிரெஞ்சும், டச்சும், ஆங்கிலேயரும் செய்தமாதிரி,

சண்டையிலேயே முடியலாம். வேறு எக்காரணத்துக்கேனும் சண்டை போட்டா லும், ராணுவ முறையில் மட்டில் இன்றி, வியாபார முறையிலும் சண்டை நடை பெறுவது திண்ணம்.

4. இங்கிலாந்தின் ஜனங்கள் தைரியமாக வெளிநாடுகளுக்குச் சென்று, புது தேசங்களைக் கண்டுபிடித்து, நீரிலும் நிலத்திலும் சண்டைகள் போட்டு, அதன் பொருளாதார நிலையை வலுப்படுத்தினார்கள். அதனால் அது வியா பாரத்தில் விசேஷ மாத்சர்யங்கள் பாராட்டுவதில்லை. சுமார் 50 வருஷங் களாக முக்கிய சாமானின் அடக்கத்துக்கு மேல் ஸ்வல்ப லாபம் வைக் கிறது, இறக்குமதிகள் சிலது உள்ளூருக்குள் வரக்கூடாது அல்லது வெளியில் செல்லும் ஏற்றுமதிப் பொருள்கள் சிலதுக்கு உதவி செய்யவேண்டும், என்ற விருப்பவெறுப்புகள் இல்லாத சர்வதேச சாமான் மாற்றுதல் வியாபார முறை அது. ஆயினும், வியாபாரத்தில் அது அடைந்த உன்னதநிலை பிர தேசங்களின் பொறாமையை மூட்டியது. அமெரிக்கா, பிரான்ஸ் போல் அவற்றுள் சில தங்கள் வியாபார விவகாரங்களை சமரச பேரங்கள் மூலம் தீர்த்துக்கொண்டன. ஜெர்மனி போல் சிலது இங்கிலாந்திடமிருந்து அதன் வியாபாரத்தைப் பிடுங்கு வதுடன் நில்லாமல், இனிபோட்டிக்கே இடமன்னியில் அதை அழித்துவிட வேண்டுமென்று ஒரு கொடிய யுத்தத்தை முன்னும் செய்தது, இன்றும் செய்கிறது.

## முற்றுகை.

5. வியாபாரத்துக்கு நீண்ட கடல் மார்க்கங்கள், சோதனை செய்த வழிகள், துறைமுகங்கள், அவைகளினின்று ரயில் பாதைகள், எல்லாவற்றையும்விட கப்பல் களும் தேழ்வை. விலை பெற்ற சாமான்களை சுமந்து செல்லும் கப்பல்களுக்கு தெரிந்த எதிரிகள், தெரியாத கப்பல் கொள்ளைக்காரர்களிடமிருந்து காபந்து வேண்டும். செல்வம் நிறைந்த நாடுகள் ஆயுதம் தாங்காத கப்பல்களுக்கு மாறாக படைக்கலங்கள் தாங்கும் யுத்தக் கப்பல்களையும் கட்டுகின்றன. வியாபாரக் கப்பல்கள் மிகுந்து ஜாஸ்தி நடமாட்டம் செய்யச்செய்ய அவற்றைக்காக்க கடற் படையும் வலுவானதாக இருக்கவேண்டும். உலகினில் வியாபாரத் துறையில் முதல் நிற்கும் தேசம் என்ற முறையில் பிரிடனின் கடற்படைதான் எல்லா வற்றினும் பெரிது. தன் கப்பல் பாதுகாப்புடன், தன் கரைகளுக்கு சாமான்கள் கொண்டுவரும் கப்பல்களிலும் அக்கறை உண்டானதால், இங்கிலாந்து சர்வ தேசத்துக்காகவும் கடல் போலீஸ் (காபந்து) வேலையையும் கவனித்து வந்திருக் கிறது. பிற நலனுக்கென்று இது செய்யப்படவில்லையாயினும், இதனால் நூற்றுக் கணக்கான தேசங்களுக்கு சௌகர்யம் ஏற்பட்டிருக்கிறது. உலகினில் பாதியின் வியாபாரம் இதன் மேல் நிற்கிறது. பிரிடன் யுத்தத்தில் இறங்குமாயின், அது பார்த்துவரும் இத்தொழிலே ஒரு வலுவான ஆயுதமாக அதன் கையில் மாறுகிறது. அதன் சத்துருக்களின் வியாபாரம் தடைப்படுகிறது. அதன் நேச நாடுகள் அல்லது நடுநிலை நாடுகளின் வியாபாரம் மட்டில் தடைப்படவில்லை. வ்யதிரேகமாக, பிரிடிஷ் வியாபாரமும், அதன் போலீஸ் கடற்படை மீது தாக்குதல்களால்

நூற்றுக்கணக்கான தேசங்களின் வியாபாரமும் அபாயத்துக்குள்ளாகிறது. வியாபார யுத்த முறைகள் அனுஷ்டானத்துக்கு வந்து, 'முற்றுகை' என்று கடல் யுத்தத்தில் பிரயோகிக்கப்படும் பதத்தின் தாத்பர்யம் நடை பெறுகிறது.

6. 'முற்றுகை' என்பதைப்பற்றி சற்று கவனிப்போம். இதுபோன்ற பெரும் யுத்தத்தில் வியாபாரத்தின் சுதந்திரத்தை பாதிக்கக்கூடிய சில உரிமைகளைச் சண்டை நாடுகள் கொண்டாடுகின்றன. அதைத்தான் 'முற்றுகை உரிமை' என்கிறோம். நிலச்சண்டையிலிருந்து எடுத்த இந்த சொற்றொடர் ஆதியில், ஒரு நகரையோ கோட்டையையோ, நிலப்படை அல்லது நீர்ப்படையால் வளைத்து, யாதொரு உதவியோ சாமான்சட்டோ, முக்கியமாக உணவுப் பொருள்கள் கிட்டாமல் செய்வதை குறித்தது. நெபோலியனுடன் செய்த யுத்தத்தில் முதன் முதலில் இங்கிலாந்து, பிரான்ஸுக்கும் அதன் நேச தேசங்களுக்கும் கடல் மார்க்கமாகச் சாமான்கள் செல்லாமல் தடுக்கும் பெரும் கடமையை மேற்கொண்டது. இதற்கு பர்த்தியாக நெபோலியன் 'கண்ட முற்றுகையை' விதித்தான். இதனால் ஐரோப்பாவிலுள்ள எல்லா தேசங்களையும் இங்கிலாந்துடன் வியாப்ார உறவு வைத்துக்கொள்ளக்கூடாதென்று தடுத்தான், இங்கிலாந்து இட்ட முற்றுகை பலித்தது; நெபோலியன் விதித்தது பலிக்கவில்லை. கடல் ஆதிக்கம்பெற்ற தேசம் கப்பல்களின் வரவை தடுத்தது. நில ஆதிக்கம்பெற்ற தேசம் கப்பல்கள் கிளம்புவதைத் தடுக்க முடியவில்லை. பலித்தாலும் பலிக்காவிட்டாலும் ஸிவிலியன்களுக்கும் நடு நிலை நாடுகளுக்கும், தங்கள் அவசிய சாமான்களின் போக்கு வரத்தைத் தடை செய்வதால், முற்றுகையென்றால் வெறுப்பு. ஆயினும் சண்டைக்காரர்கள் அதை உபயோகித்துத்தான் ஆகவேண்டும். ஹேக் கூட்டத்தின் சார்பாக 1909-ல் பிறந்த லண்டன் வெளியீட்டில், குறித்த துறைமுகத்தின் அருகில் தான் கடலில் சாமான்களைத் தடை செய்யலாம். அந்த எல்லைக்கப்புறம் தடை செய்தால் அது கடற் கொள்ளையாகும், என்று விதிக்கப்பட்டது. அதில் ஸிவிலியன் தேழ்வை ஒருபுறம், ராணுவத் தேழ்வை மற்றொரு புறம், வியாபாரத்தில் தடை செய்யக்கூடிய சாமான்கள்—இம்மாதிரி வித்தியாசங்களை விவரிக்க முயன்றது. இதை ஐக்கிய அமெரிக்கா மட்டில் அங்கீகரித்தது. 1914-ல் யுத்தம் ஆரம்பமானவுடனேயே இது ஏட்டுச் சுரக்காய் என்பது விளங்கிற்று. இங்கிலாந்து சில காலம்வரை அதன் ஷரத்துகளை அனுஷ்டிக்கப்பார்த்தது. இதன் பலன்—அதற்கும் நடுநிலைநாடுகளுக்கும்—முக்கியமாக ஐக்கிய அமெரிக்காவுக்கும்—ஓயாத தொல்லைகள் உண்டாகிற்று. சட்ட நிபுணர்கள் இங்கிலாந்தை இழுத்துவைத்த இந்த இழுவையிலிருந்து தப்ப அதற்குத் ஒரு மார்க்கம் கிடைத்தது. ஜெர்மனி இந்த சட்ட மூட்டையை ஒரு கையால் விலக்கிவிட்டு, இங்கிலாந்துக்குச் செல்லும் கப்பல் எத்தேசத்துதாயிருந்தாலும் அதை முழுகடிப்பேன், என்றது. இதன் விளைவாக அமேரிக்கா யுத்தத்தில இறங்கிற்று. பிறகு சண்டைக்காரர்களுக்கும் சரி, நடு நிலைமை தேசங்களுக்கும் சரி, முற்றுகையின் நிஜ வரம்புகள் எம்மட்டு, எது நியாயம், எது அநியாயம் என்பது, தெளிவாகப் புலன்பட ஆரம்பித்தது. ஆரம்பத்தில்

அமெரிக்காவின் சில முணுமுணுப்புகளுக்குப் பிறகு, இன்று முற்றுகையைப் பற்றி புகார் செய்ய ஒருவருமில்லை.

## 1914 முதல் 1918-வரு யுத்தத்தில் கட்டுப்பாடுகள்.

7. இம்மாதிரி நாடுகள் வியாபார முறையிலும் சண்டை செய்யும்பொழுது 'சர்வ தேசச் சட்டம்' என்ற ஒரு இஞ்சினியைக் கூப்பிடுவதைவிட உள்நாட்டில் அநேக சட்ட திட்டங்களை இயற்றவேண்டிவந்தது. இதனால்தான் இந்தக் கட்டுப்பாடும் அந்தக் கட்டுப்பாடும்—உணவுப் பொருள்கள் (விலைகள் ஏறுமலிருக் கவும் சாப்பாடுகள் அளந்து கொடுக்கவும்), பணம் (பயந்தாங்கொளிகள் அவசர மாகப் பணங்களை வாங்கி வேறு பந்தோபஸ்தான நாடுகளுக்கு மாற்றுவதால் அந் நாட்டில் பணப்பிரியம் ஏற்படாமலிருக்கும்படி செய்ய), கப்பல் (அனுவசியமான செல்வப் பொருள்களை ஏற்றி யுத்தம், ஸிவிலியன் தேழ்வைகளுக்கு ஏற்ற இடமில் லாமல் செய்யாமலிருக்க)—இக்கட்டுப்பாடுகள் எல்லாம் அவசியமாகின்றன. சென்ற யுத்தத்தில் கட்டுப்பாடு அதிகாரிகளில் கியாதி பெற்றவர்கள் லார்டு டாவென் போர்ட்டு, லார்டு ரோண்டா; இந்த யுத்தத்தில் லார்டு வுல்டன், ஸர் ராபர்ட் கிங்ஸ்லி, ரோனல்டு கிராஸ். இவ்வளவு முன் யோசனையும் முன் ஏற் பாடும், எதிரி ஜாஸ்தியாகத் தாக்குவதால் நேரக்கூடிய சாமான் தட்டிலிருந்து காப்பாற்ற—1915 முதல் 1917-வரை நேர்ந்தது போலவும் சென்ற வருஷக் கடாசியில் நேர்ந்தது போலவும் நேராமலிருக்கும்படி காப்பாற்ற—அவசியம். முந்தின யுத்தத்தில் ஜெர்மானியர்கள் நீர்மூழ்கி யுத்தக் கெடுபிடியை ஆரம்பித் தார்கள். 1914-ம் வருஷத்தில் பிரிடிஷ் கப்பல்களுடையவும் நடு நிலைமை நாடு களின் கப்பல்களுடையவும் பொது நஷ்டங்கள் 55,000 டன்கள். நம்முடைய கப்பல்படைகள் சகிக்கமுடியாதவிதமாய் ஜெர்மனியின் துறைமுகங்களை முற்றுகை செய்ததற்கு அவர்களின் பதில்தான் இது. 1917-ம் வரு பிப்ரவரி மாதத்தில் ஜெர்மானியர்கள் நீர்மூழ்கி யுத்தத் தாக்குதல்களை அதிகப்படுத்த ஆரம்பித்தார் கள். அது அவர்களுக்கு வெற்றிகரமாகவேயிருந்தது. அதன் விளைவாக அந்தக் காலத்தில் மாதாந்திரக் கப்பல் நஷ்டங்கள் சுமார் 2,00,000 டன்கள்வரை உயர்ந் தது. "சில மாதங்களுக்குள், நீர் பரப்பின்பேரில் நம்முடைய முற்றுகை ஜெர் மனிக்கு எவ்வளவு ஆபத்தானதோ, அதைவிட ஜெர்மானியர்களின் நீர்மூழ்கி முற்றுகை நமக்கு ரொம்ப ஆபத்தானது" என்று அக்காலத்தில் ஸர் ஆர்தர் ஸால்டர் கூறினார். அந்த ஆபத்து அதிகமாயிருந்ததால் அதைத்தடுக்க புதுவழி கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. தாத்காலிகமாக வழித்துணை காபந்துகள் செய்துபார்க்கப்பட்டது; ஆனால், அது அவ்வளவு வெற்றிகரமாயில்லை. 1917-ல் சட்ட பூர்வமான அதிகாரங்களுடனும், மந்திரி சபையில் ஸ்தானத்தை வகிக்கும் கப்பல் (கன்ட்ரோலர்) நியந்தாவைக்கொண்டதுமான ஒரு கப்பல் மந்திரி சபை யும், எடைமான நிர்தாரண கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டது, இதற்குச் சரியான பிரதிகாரமாயிற்று. பிறகு 1917-ல் அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியது. அதனால் நம்முடைய பணக்கஷ்டம் கொஞ்சம் குறைந்தது. ஆனால், அமெரிக்கா சைனியங் களை ஏற்றிக்கொண்டுவர கப்பல்கள் தேவையாயிருந்தன. அவர்களின் பாதுகாப்புக் காக அதிகமான பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டியதும் அவசியமாயிற்று.

இப்பொழுது நமக்கு நன்குய் தெரிந்திருக்கும் வழித்துணைக் கப்பல் படையும் வெகு சிரமத்தின்பேரில் அப்பொழுது கட்டப்பட்டு அதுவும் மகத்தான வெற்றியாக முடிந்தது. இந்தக் கட்டுப்பாடும் அந்த இலாகாவுடன் நில்லாமல் தேசியமாக ஆயிற்று. அந்தப் பெரிய கட்டுப்பாட்டு இலாகா முதலில் கப்பல் இலாகாவின் அவசியமான தேவைகளை குறைக்கவேண்டிய நோக்கத்துடன் ஆலோசனைகள் செய்வதற்காகக் கூடிற்று. இறுதி அதிகாரம், விரிவான அதிகாரங்களையுடைய ஒரு காபினட் கமிட்டியாரிடம் இருந்தது. எல்லா நேச தேசத்தாரின் செய்கைகளையும் ஒற்றுமைப்படுத்த ஒரு நேச தேச கப்பல் சபை நிறுவப்பட்டது.

8. சென்ற யுத்தத்தில் நடந்தவைகளைப்பற்றி, சற்று விஸ்தாரமாகவே நான் கூறியதற்குக் காரணம் அப்பொழுது இப்பிரச்னைகளெல்லாம் இவ்வளவு சிக்கல்களுடன் எழுந்ததினுல்தான். அப்பொழுது கிடைத்த அனுபவம் இப்பொழுது மிக்க பலனளித்தது. இந்த யுத்தம் ஆரம்பித்தவுடன் எதிர்பார்த்த பிரச்னைகளைத் தீர்க்க அந்தந்த சபை யந்திரம்போல் தானுகவே வேலை செய்தது. முன்போல் தட்டுத்தடுமாறுதல் ஒன்றும் கிடையாது. பழைய “வியாபார சபை” கற்கவேண்டியதைக் கற்றுவிட்டது. அது ஒரு ஏற்றுமதி சபை அமைத்து தன்னுடைய அதிகாரங்களில் பலவற்றை அதற்கு அளித்தது. அத்துடன் இந்த யுத்தத்தில் மிக்க முக்கியத்வம் வாய்ந்த புதிய மந்திரி சபைகளும் நிறுவப்பட்டன.

9. இவற்றுள் முதலாவது பொருளாதார யுத்த மந்திரி சபை. வியாபார, நிதி நிபுணர்கள் அதில் அங்கத்தினர்கள். சர்வாதிகார தேசங்களில்போல அதற்கு நிர்வாக அதிகாரமில்லாமல் யோசனை கூறும் அதிகாரம் மட்டில் இருப்பினும், இந்த யுத்தத்தின் ராணுவ திட்டங்களுக்கும் தந்திரங்களுக்கும் அதுதான் ஆதார பூதமானது. ஒரு உதாரணம்:—பிரிடனில் அநேக நகரங்களில் அவற்றுல் வெடிகுண்டு உற்பத்தி தடைப்படும் என்ற உத்தேசத்தின்பேரில் ஜெர்மானியர்கள் கண் மூடித்தனமாய் குண்டுகளை வீசுகிறுர்கள். ஆனுல் ஆர்.ஏ.எப். (R. A. F.) குண்டு வீச்சுகளுக்குப் பின் ஒரு நியதி இருப்பதைக்கண்டு ஜெர்மானியர்கள் திகிலடைகிறுர்கள். 15—9—40 முதல் 22—9—40 வரை ஜெர்மன் நீர்மூழ்கிகளால் கப்பற்சேதம் 50,000-லிருந்து 1,65,000-க்கு அதிகரிக்கிறது. உடனே பொ.யு.ம. சபை ஒரு ரோக்கா அனுப்புகிறது. ஆர்.எ.எப். நீர்மூழ்கி நிலயங்களைத் தாக்குகிறது. அடுத்த வாரம் சேதம் 70,000-க்கும் அதற்கடுத்த வாரம் 30,000-க்கும் குறைகிறது. இதைவிட முக்கியமானது, ஏற்கனவே கடகடத்துப்போன ஜெர்மனியரின் நிலம், நீர் போக்குவரத்து சாதனங்களை இன்னும் நிலைகுலையச் செய்ய இந்தச் சபை லக்ஷியங்களைக் காட்டியும் சத்துருக்களின் உற்பத்தி ஸ்தானங்களையும் கிடங்குகளையும் குறித்து சாம்ராஜ்ய வெடிகுண்டு விமானங்களை ஏவுவதும்தான். மற்ற கட்டுப்பாடு இலாக்காக்கள் இவைதான்:—உலகம் முழுவதும் ஆயுதங்களையும் மூலப்பொருள்களையும் ஏராளமாய் வாங்கும் சப்ளை மந்திரி சபை; உணவுப்பொருள்களின் இறக்குமதி, சேமிப்பு, நியாயமான வினியோகம் இவைகளைப் பராமரிஷிக்கும் உணவுப்பொருள் மந்திரி சபை; பழைய கப்பல் மந்திரி சபை.

# யுத்த அபாயங்கள்.

## (1) கொள்ளைக்காரக் கப்பல்கள் (ரெய்டர்கள்)

10. வியாபாரத்துக்கு அபாயங்கள் என்ன, அவைகளை எவ்வாறு சமாளிப்பது? முதல் அபாயம், கடல்மீது செல்லும் ஜெர்மன், இதாலிய கடற் படைகள். இவை இரண்டும் பிரிடிஷ்படையுடன் சண்டைக்கு நிற்கமுடியாது. அவைகள் கோட்டைசூழ்ந்த துறைமுகங்களுள் பதுங்கிக் கிடக்கின்றன. இடை யிடையே, ஜெர்மன் குரூய்ஸர் அல்லது 'பாக்கட்' யுத்தக் கப்பலில் ஒன்று திருட்டுத்தனமாக வெளியேறி, வியாபாரக் கப்பல்களை அழிக்கிறது. அவைகள் 11 அங்குல பிரங்கிகள் தாங்குகின்றன்; வாஷிங்க்டன் ஒப்பந்தப்படி பிரிடிஷ் துணைக்கு குரூய்ஸர்களில் 8 அங்குல பீரங்கிகள்தான் இருக்கின்றன. தவிர எல்லா கடல் மார்க்கங்களையும் யுத்தக் கப்பல்களால் காப்பது அசாத்தியம். இதற்காக வேகமாகச்செல்லும் வியாபாரக் கப்பல்களில் ஆயுதம் ஏற்றியிருக்கிறது. ஆனால், பெரிய ரெய்டர் கப்பலுடன் யுத்தத்தில் அவைகளின் பெரிய பீரங்கிகளால் இவைகளின் பீரங்கிகள் வாயடைக்கப்படுகின்றன. 'கிராப் ஸ்பீ'யை முறியடித் தது ஒரு பெரிய ராமாயணம். ஆனால், அந்த வெற்றி மாலுமிகளின் தைரியம் யுத்த தந்திரம் இவற்றால் பெறப்பட்டது, கப்பல்களின் பீரங்கி பலத்தாலல்ல. சென்ற யுத்தத்தில் 1914 ஆகஸ்டு முதல், நவம்பருக்குள் 'எம்டனும்,' 'கார்ல்ஸ்ரூ' வும் 1,59,547 டன் எடைமானம் 32 நேச தேச கப்பல்களை முழுகடித்தன. கிராப் ஸ்பீ 50,089-டன்களுள்ள 9 கப்பல்களைத்தான் முழுகடித்திருக்கிறது. ஆயினும், பெயர்களையும், உருக்களையும் மாற்றி, திடீரென்று தோன்றி, அட்டூழியங் களைச் செய்து, இருட்டில் மறையும் இதர ரெய்டர் கப்பல்கள் சமுத்திரத்தில் வெளியே சஞ்சரிக்கின்றன. 6—2—41-ல் மெடீரியா தீவுக்கு அருகில் ஒரு எதிரி ரெய்டர் 6 கப்பல்களை முழுகடித்தது. மற்றொன்று பஸிபிக் மகா சமுத்திரத்தில் சஞ்சரித்து ஜப்பான் கொடியை மோசடியாகத் தாங்கி, 'நௌரூ' த்தீவை தாக்கியது.

### துணைப்படை.

11. ரெய்டரிலிருந்து தப்பும் வழி அதை கிராப் ஸ்பீயைப்போல அழிப்பது ஒன்று. மற்றொரு மார்க்கம் வியாபாரக் கப்பல்களுடன் பலமான ஆயுதம் தாங்கிய கப்பல்களைத் துணையாக அனுப்புவதும், சாரண விமானங்களை உபயோகித்தலும். இவை பலனளிக்கின்றன என்பது ரெய்டர்கள் அடிக்கடி தொந்திரவு கொடுக்காமலிருப்பதிலிருந்து வெளியாகிறது. தவிர, நூற்றுக் கணக்கான நேச தேசக் கொத்தளங்களிலிருந்து வேவு பார்ப்பதால் நடுநிலைமை துறைமுகங்களிலிருந்து சந்தேகாஸ்பதமான கப்பல்கள் வெளியே புறப்படுவது தெரியும். விமானங்கள் ரோந்து கடற்படைகளுக்கு தகவல் கொடுக்கின்றன. இவைகள் ரெய்டர்களுக்கு அவசியமான சாமக்கிரியைகளை முக்கியமாக விறகாக உபயோகப்படும் கரி அல்லது எண்ணெய் இதர சப்ளைக் கப்பல்கள் அளிப் பதைத் தடுக்கின்றன, 'நாவிஸெர்ட்' திட்டமும்—அதாவது துறைமுகங்களிலேயே

எதிரிக்காக அல்ல என்று தெரிந்தால் ஸர்ட்டிபிகேட் கொடுப்பது, இல்லாவிட்டால் மறுப்பது, கடலிலேயே அக்கப்பலைத் தடுப்பது—இதுவும் ரெய்டர்களின் பிழைப்பை அரிதாக்குகிறது.

(2) நீர்மூழ்கி.

12. கடல்மேல் செல்லும் ரெய்டருக்குப்பிறகு, ஜனங்களை அனுவசியமாக பயமுறுத்தக்கூடிய நீர்மூழ்கிகளைப்பற்றிச் சொல்லுவோம். சென்ற யுத்தத்தில் அது புதிது. அதனுல் ஒரே திகில் ஏற்பட்டது. கஷ்டப்பட்டு அது சமாளிக்கப்பட்டது. 1914 முதல் 1918 வரை அழிந்த கப்பல்களின் எடைமானம் இது.

| வருஷம். | பிரிடிஷ் சாம்ராஜ்யம். | பிரான்ஸ். | நேச தேசங்கள், நடுநிலைமை தேசங்கள், இவைகளின் மொத்தம். |
|---|---|---|---|
| 1914 ... | 2,52,738 | 14,414 | 3,19,400 |
| 1915 ... | 8,85,471 | 93,987 | 13,12,216 |
| 1916 .. | 12,31,867 | 1,69,829 | 23,05,569 |
| 1917 ... | 36,60,054 | 4,59,454 | 60,78,125 |
| 1918 ... | 16,32,228 | 1,78,107 | 25,28,082 |

13. ஜெர்மானியர்கள் தங்கள் நீர்மூழ்கிகளால் வியாபாரக் கப்பலைத் தகர்த்து, பிரிடனுக்கு பிறதேசங்கள் சாமான்கள் கொண்டுபோவதைத் தடுக்க முயன்ருர்கள். சில வாரங்களில் நஷ்டத்தைக்கேட்கவே பயமாயிருந்தது; உதாரணமாக 2,00,000-டன்கள். பிறகு துணைக்கப்பல் திட்டம் வேரூன்றியது; அபாயமும் நீங்கிற்று. பிரான்ஸ விழுந்தவுடன் அட்லாண்டிக்கிலிருந்த கொத்தளங்களை ஜெர்மானியர் பயன்படுத்திக்கொண்டார்கள். சென்ற அக்டோபர் நவம்பரில் அவர்களுடைய தாக்குதல்கள் உக்கிரமாயின. ஆனுல் மறுபடியும் இதற்கு வழிபிறந்தது. சென்ற 2-மாதங்களாக நஷ்டம் சுமார் 30,000-டன்கள் தான். இந்த விகிதப்பிரகாரமும் அபாயம் தான். இதுவரை 30-லக்ஷம் டன் பிரிடனுக்கும் நேச தேசங்களுக்கும் சேதம் எனில், புதிதாக கட்டல், வாங்குதல் இவைகளின் மூலம் 10-லக்ஷம் சரி காட்டப்பட்டது. 20-லக்ஷம் பாக்கி நிற்கிறது. இதற்கு பிரிடன் சும்மாயிருக்க முடியாது. ஆயினும் நீர்மூழ்கிகளால் ஹிட்லர் ரொம்ப ரொம்ப சேதம் எதிர்பார்த்து பெர்லின் ஸ்போர்ட்ஸ் பிளாஸ்ட் கட்டத்தில் வெளியிடவும் வெளியிட்டார். அதில் இப்பொழுது பத்தில் ஒரு பங்குதான் நிறைவேறி இருக்கிறது. பிரிடனுக்கு அமெரிக்கா கப்பல்கள் உதவக்கூடாது என்று பயமுறுத்துவதற்காக இது கூறப்பட்டதாகத் தோன்றுகிறது.

காபந்து.

14. வியாபாரப் போரில் கப்பல் நிலைமை மிகவும் முக்கியமானதால் அதை இங்கு சற்று விசாரிப்போம். நாம் மேலே காட்டியிருக்கிறபடி பிரிடிஷ்

கப்பல் மந்திரி 'நஷ்டம் பெறுத்ததே' என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் சிலர் அவர் முழு நிஜத்தையும் கூறுவதில்லையென்று எண்ணுகிறார்கள். அதை நான் ஆட்சேபிக்கிறேன். மூழகிய ஒவ்வொரு கப்பலைப்பற்றியும் விவரம் கூறப் படுகிறது. சரியான புள்ளி விவரங்களும் வெளியிடப்படுகின்றன. கடைசி யுத்தத் திலும் அப்படித்தான், இந்த யுத்தத்திலும் அப்படித்தான். முன்னைக்காட்டிலும் யுத்தத்தேழ்வைகளால் கப்பல்களில் ஜாஸ்தி இடவசதி வேண்டியிருக்கிறது. ஆயினும் பிரிடிஷ் கப்பல்களின் எடைமானமானது யுத்த ஆரம்பத்தில் இருந்ததை விட இப்பொழுது குறையவில்லை. சென்ற யுத்தத்தில் இவ்வாறு குறைந்தது. ஆனால் இந்த யுத்தத்தின் ஆரம்பத்திலேயே பிரிடிஷ் சர்க்கார் கப்பல் கட்டும் தொழிலை தங்கள் பொருப்பாக எடுத்துக்கொண்டனர். நாளுக்குநாள் விருத்தி யாகும் ஒரு திட்டம் வகுத்து நடைபெற்றும் வருகிறது. தவிர, ஐக்கிய அமெரிக் காவில் பிரிடனுக்காக 200-கப்பல்கள் கட்டப்படுகின்றன. மேலும் சர்வதேச சட்டப்படி, தன் துறைமுகங்களிலிருக்கும் கப்பல்களை பிரிடன் தனக்காக சாமான் சுமக்கச்செய்து வாடகை கொடுக்கலாம், அல்லது கப்பலுக்கு விலைபோட்டு எடுத்துக்கொள்ளலாம். தவிர பிரிடிஷ் கப்பல் மந்திரி, தன் கண் நாட்டம் அமெரிக்கா துறைமுகங்களிலிருக்கும் நடுநிலைமை தேசக்கப்பல்களின் மீது இருப்பதாகவும், அவைகளைத் தான் கவர ஆசைப்படுவதாகவும், வேடிக்கையாகக் கூறியிருக்கிறார்! இவைகளை பிரிடன் எடுத்துக்கொள்ள பேரங்கள் நடக்கிறது போலும். இருந்தபோதிலும் ஒன்றுமட்டில் சொல்ல விரும்புகிறோம். சௌக்கிய மான சமாதான காலங்களுக்குப் போதுமான கப்பல்கள், யுத்த காலத்தில் அதன் பெரும் தேழ்வைகளுக்குப் போதாது. கப்பல் மந்திரிக்கு காரியதரிசியான ஸர் ஆர்தர் ஸால்டர் (என்ஸைக்ளோபீடியா பிரிடானிகாவில் கப்பல் சம்பந்த மான கட்டுரைகள் எழுதியவர். கப்பல் விஷயங்களில் நிபுணர்) 18—3—40-ல் காமன்ஸ் சபையில் பேசுகையில், நஷ்டமான ஒவ்வொரு கப்பலுக்கு பார்த்தியாக மற்றொரு கப்பல் கட்டினாலும், யுத்தத்தில் கப்பல்களை அந்தந்த தேழ்வைக்குத் தக்கபடி பகிர்ந்துகொடுப்பதின் சிரமங்களை அழகாகச் சுருங்கக்கூறியிருக்கிறார். அவைகள் வருமாறு.

(1) யுத்த காலத்தில் இறக்குமதி சக்தி குறையும்.

(2) அநேக இறக்குமதி கப்பல்களை கடற்படை, தரைப்படை காரியங் களுக்குப் பிரத்தியேகப்படுத்தவேண்டிவருகிறது—உதாரணம், ராவல்பிண்டி.

(3) சமாதான காலத்தில் பிரிடனின் இறக்குமதியில் மூன்றில் ஒரு பங்கு நடுநிலைமை கப்பல்களில் வருகின்றது. யுத்த காலத்தில் அவ்வளவு எதிர்பார்க்க முடியாது.

(4) யுத்த உற்பத்திகளுக்காக உபரி மூலப்பொருள்களைக் கொண்டுவர வேண்டும்.

(5) புது இடங்களிலிருந்தும் இறக்குமதி செய்யவேண்டும்—உதாரணம், பால்டிக் நாடுகளுக்குப் பதிலாக சாம்ராஜ்யப் பகுதிகளிலிருந்து மரம், மாம்சம், நெய், வெண்ணெய், பால்கட்டி முதலியன.

### (3) ஆகாயத்திலிருந்து அபாயம்.

15. அடுத்த அபாயம் வேறு திசையிலிருந்து. ஜெர்மானியர்களுக்கு இங்கிலாந்தின் வியாபாரத்தின் குறவளையை தங்கள் கழுகுப் பாய்ச்சல் விமானங்கள் நிச்சயமாகப் பிடிக்கப்போகின்றன என்ற பரம நம்பிக்கை இருந்தது. விமானம் பலமா, யுத்தக் கப்பல் பலமா, என்பது ஒரு பழைய விவாதம். அதன் முடிவை உலகம் ஸ்வாரஸ்யத்துடன் கவனித்துவருகிறது. ஒரு பரீட்சைக்களம் ஆகிய இங்கிலீஷ் சானலில் யுத்தம் நீடித்து பலமாக நடந்தது, அதில் யுத்த விமானம் தோற்றது. அதே பாடத்தைத்தான் ஸிஸிலியின் குறுக்குப் பாகங்களில் 'இல்லஸ்ட்ரியஸ்' 'ஸௌதாம்டன்' என்ற கப்பல்களை மிக்க தீரமாக ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் தாக்கியதும் கற்பிக்கின்றன. இந்த அபாயம் நீங்கிற்று என்று சொல்ல முடியாது. இருந்தபோதிலும், கடற்படையின் விமானங்களும் விமானத் தாக்கிகளும் இவ்வளவு குறிதப்பாமல் சுடுகையில் ஜெர்மானியர்கள் தங்கள் நஷ்டங்களுக்குப் பயந்து பின்வாங்குவார்கள் என்றே எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

### (4) கண்ணிகள்.

16. கடைசி அபாயம், கண்ணிகளிடமிருந்து. ஊன்றின அல்லது மிதப்பன. ஹேக் கூட்டம் சில விதிகள் விதித்திருக்கிறது. (1) சத்துருவின் கரைகளைச் சுற்றி, வியாபாரக் கப்பல்களை தடுக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன்மட்டில், கண்ணிகள் போடக்கூடாது. (2) அபாயப் பிரதேசங்களைக் கிரமப்படி உலகிற்கு அறிவிக்கவேண்டும். இவற்றை ஜெர்மனி கொஞ்சம்கூட சட்டை செய்யவில்லை. இங்கிலாந்து ஒழுங்காக அறிவித்துவருகிறது. சத்துரு காந்தக்கண்ணிகளால் அக்கிரமத்தில் மீறினன், இதன் விளைவு அபாரம் என்று பறை சாத்தினன். சில துர் அதிர்ஷ்ட வசமான கப்பல்களை அவைகளில் அகப்படுத்தி தகர்த்தான். கடைசியில் பிரிடிஷார் கண்டுபிடித்த டிகாஸென் காந்த விரோதிவளையத்தால் அது நிராகரிக்கப்படுவதையும்கண்டு ஏமாந்தான். யுத்தத் தேழ்வையான இடங்களில் இருதரத்தாரும் கண்ணிகள் யிடுகின்றனர். ஆயினும் கெட்ட எண்ணம் இல்லாத கப்பல்கள் குறித்த பாதைகள் வழியாக பத்திரமாக இட்டுச் செல்லப்படும்.

## முற்றுகை எந்த அளவு பயனுள்ளது?

17. இவைகள்தான் வியாபார யுத்தத்தில் முக்கியமான முற்றுகையின் அஸ்திரங்கள். பிரிடனும் ஜெர்மனியும் ஒன்றுக்கொன்று முற்றுகை போட்டு இருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகின்றன. பிரிடனுடையது பயனுடைத்தது; ஜெர்மனி செய்யும் முற்றுகை தூக்குத்தூக்காகவும் அறைகுறையாகவும் பயனுள்ளது. அச்சுக்கூட்டாளிகள் பிரிடிஷாரின் மென்னிப் பிடியிலிருந்து தப்ப என்ன முயற்சிகள் செய்கிறுர்கள் என்பதை கவனிப்போம்.

18. சென்ற யுத்தத்தில் முற்றுகையின் அநர்த்தத்தை ஜெர்மனி உணர்ந்தது. 1935-ம்வருடம் பொருளாதாரத் தடை இதாலிக்கு ஏற்படும் போலிருந்தது. அதனால்

அதற்குபயமும் கோபமும் ஏற்பட்டது. ஆனதால் இரண்டு தேசங்களும் முன்னூலேயே கடல் முற்றுகையிலிருந்து தப்ப வழிகள் தேட ஆரம்பித்தன. ஜெர்மனிக்கு மார்ஷல் கோயரிங் ஒரு நாலு வருஷ திட்டத்தை வகுத்தார். அதை இதாலி பின்பற்ற முயன்றிருக்கிறது. அதன் முக்கிய அம்சங்கள். (1) ஜெர்மன் நாணயமான ரெயிஷ்மார்க் வெளிநாணயங்களுடன் பிணைக்கப்படுவதால் வரும் அபாயத்தை நீக்கவேண்டி உள்ளூரில் மட்டில் செலாவணியாகிறது. (2) வெளிநாட்டு வியாபாரம் பண்டம் மாற்றுவதின் மூலம் (3) வெளியூர் மூலப்பொருள்களுக்குப் பர்த்தியாக உள்ளூரில் "பதில்வெட்டு" சாமான்களின் உற்பத்தி. இதை அனுசரித்து ஜெர்மனியில் பெரும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன— பதில்வெட்டு பெட்ரோலியம், ரப்பருக்கு பதிலாக 'பூனு' என்ற ஒரு சாமான்; இந்த 'எர்ஸாட்ஸ்' சாமான்கள் மூலம் ஜெர்மனி தன் தேவைகளைத் தானே தீர்த்துக்கொள்ள முயன்றது. இதைத்தான் ஜெர்மானியர்கள் 'ஆடார்கி' என்றூர்கள்—தன் திருப்தி. ஆனுல் இந்த அறைகுறை பொருளாதாரக் கொள்கையை பிறரை விழுங்கிப்பிழைக்கும் கொள்கை என்று சொல்வதுதான் சரி என்று எ. ஜே. பி. பிஷர் என்பவர் காட்டியிருக்கிறூர். 1938-ம்வூ நாஸி காட்சி காங்கிரஸில் ஹிட்லர் சொன்னூர்; 'ஜெர்மனியை தன் காலிலேயே ஊன்றி நிற்கும்படி செய்த முயற்சிகள் பலித்தன. ஜெர்மனியை முற்றுகை போடலாம் என்ற அஸ்திரம் இனிப்பாழ்த்தது என்று ஸ்னம் செய்துவிடலாம்'. ஆயினும் முற்றுகைப்பாம்பு நாளுக்குநாள் ஜெர்மனிமீதுதான் சுற்றி வளைத்து வருகிறது என்பதை இவைகள் ருஜு செய்கின்றன:—ஜெர்மானியர்களே வெளிநாடுகளில் உபயோகப்படுத்தக்கூடாதென்று சொன்ன மார்க் நாணயத்தை வெளிநாடுகளில் கட்டாயப்படுத்தி வழங்கி வருகிறூர்கள். வாஸ்தவத்தில் டென்மார்க், நார்வே இவைகளைப்பிடித்ததும், ருமேனியாவில் போய் உட்கார்ந்ததும் ராணுவ தந்திரத்தால அல்ல, பொருளாதாரத் தேழ்வைகளுக்காகவே. ஜெர்மனியின் 'எர்ஸாட்ஸ்' பொருள்கள் மிகவும் கிராக்கிவிலையுள்ளன. நிஜப்பொருள்களைப் போல் இந்த பதில்வெட்டுகள் அவ்வளவு உழைப்பதில்லை. ஒரு உதாரணம்— ஜெர்மனியில் உடைக்கஷ்டம் பெரிதாகி விட்டது. இதனுல்தான் ருஷ்யாவிலிருந்து பருத்தியும், கம்பளிமயிரும் வாங்க கவலைகொண்டிருக்கிறது. ருஷ்யா, பல்கேரியா, ருமேனியா, இவற்றுடன் ஜெர்மனி செய்திருக்கும் வியாபார ஒப்பந்தங்களைக் கடிதத்தில் பார்க்க பிரமாதமாகத் தோன்றுகிறது. ஆயினும் பண்டமாற்றக் கொள்கைக்கு ஒரு வரம்புண்டு. ஜெர்மனி வேறு தேசங்களுக்கு வேண்டாத சாமான்களை தருகிரேன் என்கிறது. அதற்கு வேண்டிய சாமான்கள் அவைகளுக்கே தேழ்வை. இம்மாதிரி வாழ்வதற்கு சமாதான முறைகள் போதாத போதுதான் ஜெர்மன் துருப்புகள் கொள்ளையிட இன்ன இன்ன எல்லைக்குச் சென்றுவிட்டன என்று கேள்விப்படுகிறோம்.

19. பொருளாதார முறையில் காபந்தாக இந்த தந்திரங்களில் மாங்காய் விழாது. இவைகள் சில்லரை சாமான்களாக இல்லாமல், சத்துருவுக்கு அவசியம் வேண்டிய எண்ணெய் போன்றதாக இருந்தால், கொஞ்சம்கூட உபயோகப்படாது. நிச்சயமாக ஜெர்மனியின் பொருளாதாரக் கோட்டை ஓட்டை தான்.

இதற்கு மாற்று யுத்த ஆக்கிரமிப்புத்தான். அதுவும் ஏராளமாக நடைபெறப் போவதைக் காணப்போகிறோம். ஆயினும் இந்தப் படையெடுப்பு எந்த தேசங்களின் மீது? ஜெர்மனி மீது பிரிடன் பிரயோகித்திருக்கும் முற்றுகை அஸ்திரத்துக்கு உள்பட்ட அதே தேசங்களின் மீதுதான். ஜெர்மனியை புதிதுபுதிதான ஆக்கிரமிப்புகளுக்குத் தூண்டும் முற்றுகையின் குறவளைப்பிடி, அதனால் அமுக்கப்பட்ட ஜனங்களின் விரோதத்தை வளர்க்கும் பிடி, ஜெர்மனியின் படைகளை மேன்மேலும் யுத்தத்தில் இறங்கி சிதறச்செய்யும் பிடி, அதனால் பலியிடப்பட்ட தேசங்களையும் திணர அடிக்கப்போகிறது; அவைகளின் உற்பத்தி சக்தியை நிர்மூலமாக்கப் போகிறது; இறுதியில் நாஸி அரசியல் கட்டடத்தையே சென்ற யுத்தத்தில் அழித்த காரணங்களுக்காகவே இந்த யுத்தத்திலும் அழிக்கப் போகிறது.

---

## வார யுத்தச் செய்திகள்.

(13—2—41 லிருந்து 19—2—41 வரை).

### பய முறுத்தல்.

ஆபிரிக்கா, அல்பேனியா போர் முனைகளில் நடக்கும் சண்டைகளைத் தவிர பாக்கி இடங்களில் இந்த வாரத்தில் நடக்கும் சம்பவங்களெல்லாம் பய முறுத்தல் என்றே சொல்லவேண்டும். யுகோஸ்லேவியா மந்திரிகள் ஹிட்லரோடு செய்த சம்பாஷணை, துருக்கிக்கும், பல்கேரியாவுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம், ஹங்கேரிக்கும் பல்கேரியாவுக்கும் ஏற்பட்டிருக்கும் நற் பயிற்சி ஒப்பந்தம், தூர-க்கிழக்கு நாடுகளில் பேசிவரும் வியாபார ஒப்பந்தங்கள் இவைகளெல்லாம், சிறிய நாடுகளையும், புது ஸ்தலங்களையும், அதிக ஐச்வர்யத்தையும் கொடுப்பதாக ஆசை வார்த்தைகாட்டி, பயமுறுத்தி அரட்டுவது என்ற ஒரு பொது நோக்கத்தைக் கொண்ட காரியங்களாகும். இந்த அக்கிரம வழியானது இப்பொழுது பால்கன் நாடுகளிலும், தூர-க்கிழக்கு நாடுகளிலும் பயிலப்பட்டு வருகிறது.

### ருமேனியா.

அவஸர அவஸரமாக ருமேனியா தேசம் ஒரு போர் முனையாக மாற்றப்பட்டு வருகிறது. ஜெர்மன் துருப்புக்களும் விமானங்களும் பலவாறாக வந்து சேர்க்கப் பட்டுவிட்டன. கான்ஸடான்ஸாவுக்கு அருகில் நதியில் வெடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இரவு காலங்களில் நகரங்களில் தீபங்கள் மறைக்கப்படுகின்றன. எண்ணெய்க்-கிணறுகள் விமானங்களால் சேதமாகாதபடி காப்பாற்றப்படுகின்றன. பல்கேரியாவுக்குள் நதிகளைத் தாண்டிச்செல்ல 50 தோணிப் பாலங்கள் தயாராய் விட்டன. யுத்த சாமான்களின் வியாபாரத்தைத் தடுக்க ருமேனியாவை ஒரு எதிரி நாடாகப் பிரிடன் பிரசுரித்துவிட்டது.

## பல்கேரியா.

**பல்கேரியாவில்.**—ரஸ்தாக்களும், ரயில் பாதைகளும், பாலங்களும், பலப் படுத்தப்பட்டு, பெட்ரோல் சேர்க்கப்பட்டு, உணவுப்பொருள்கள் பங்கிட்டு வினியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

## துருக்கி-பல்கேரியா ஒப்பந்தம்.

இந்த இரண்டு நாடுகளும் வெள்ளிக்கிழமையன்று ஒப்பந்தம் மொன்றைச் செய்துகொண்டிருக்கின்றன. வெளிப்படையாக இதன் நோக்கம், இந்த இரண்டு தேசங்களுக்குள் சிநேகத்தையும், வியாபாரத்தையும் பலப்படுத்துவதற்கு என்று சொல்லிக்கொண்டாலும், இதன்படி ஒருவரோடு ஒருவர் ஆக்கிரமிப்பதில்லை என்று வாக்குக்கொடுத்தாலும் இதில் விஷமம் இருக்கிறதாகக் கருதப்படுகிறது. முக்கியமாக, ஜெர்மனியானது பல்கேரியா வழியாக கிரீஸைப் படையெடுத்தால் இந்த இரண்டு ஒப்பந்த நாடுகளும் என்ன செய்யுமென்று தெரியவில்லை. இந்த ஒப்பந்தத்துக்கு ருஷ்யா சம்மதம் கொடுத்திருக்கிறதாம். ஜெர்மானியருடைய படையெடுப்பை இந்த ஒப்பந்தத்தின்படி துருக்கி தடுக்காதென்று ஜெர்மனி சொல்லிக்கொள்ளுகிறது. ஆனால், ஏற்கனவே செய்துகொண்டிருக்கும் உடன் படிக்கைகளை இந்த ஒப்பந்தம் பாதிக்காதென்ற ஒரு ஷரத்தும் இருக்கிறது. ஆகவே, துருக்கிக்கும், பிரிடனுக்கும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் நேய-உடன் படிக்கைப் பாதிக்கப்படாது. மேலும், இந்த ஒப்பந்தமானது ஆரம்ப முதற் கொண்டு முடியும் வரை பிரிடனுக்குத் தெரிந்தே நடந்திருக்கிறது.

## யுகோஸ்லாவியா.

இந்த தேசத்துப் பிரதம மந்திரியும், அயல் நாட்டு மந்திரியும் ஹிட்லருடன் வெள்ளிக்கிழமையன்று பெர்க்-டெஸ்காடனில் எதைப்பற்றிப் பேசினார்களென்று தெரியவில்லை. விசேஷமொன்றுமில்லை என்று சொல்லி ஜெர்மனி மறைக்கப் பார்க்கிறது அச்சு நாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடவென்று நியு-யார்க் டைம்ஸ் சொல்லுகிறது. டிரின், ஆக்ரிட-ஏரிப்பிரதேசம், ஸலோனிக்காவுக்குப் போக 20-மைல் கொண்ட ஒரு பாதை முதலியவைகளை லஞ்சமாகக் கொடுத்து யுகோஸ்லாவியாவை ஜெர்மனி கைவசப்படுத்தப் பார்ப்பதாக பெல்கிரேட் செய்தி ஒன்று சொல்லுகிறது.

## இதர பால்கன் சமாசாரங்கள்.

(1) ருஷ்யாவுக்கும், பல்கேரியாவுக்கும் வியாபாரப் பேச்சுகள் 17-ம் தேதி துவக்கப்பட்டன. (2) லண்டனில் ருமேனிய உத்தியோகஸ்தர்கள், 6 சிறு சிப்பந்திகளைத் தவிர, மற்ற எல்லோரும், ருமேனியாவுக்குத் திரும்பாது, வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டார்கள். (3) தேசீயக் கக்ஷிகளொன்றும் புதிதாக ஏற்படுத்தக் கூடாதென்று ருமேனியா பிரதம மந்திரி உத்தரவிட்டிருக்கிறார். ருமேனியாவில் மறுபடியும் கலகமாம். (4) டான்யூப் நதி உறைந்துபோய் கரைகள் உடைந்து 30,000 பேர்கள் வீடுகளை விட்டு ஓடும்படியாய்விட்டது. 10-மைல் விஸ்தீரணத்துக்குப் பரவி நிற்கும் பனிக்கட்டிகளை வெடிகள் போட்டு உடைக்கிறார்கள்.

# தூர-க்கீழ்நாட்டு நிலைமை.

சண்டை போடாது பயமுறுத்தித் தேசங்களைப் பிடிக்கும் எண்ணத்தோடும், சண்டை செய்து ஆக்கிரமிக்கும் எண்ணத்தோடும் ஜப்பான் வம்பு செய்துகொண்டு இருக்கிறது. வஸந்த காலம் வந்தவுடன் ஜெர்மனி ஐரோப்பாவில் படையெடுக்கும்போது ஜப்பான் ஆசியாவில் படையெடுக்கலாம். இதற்காக ஹாங் காங், கான்டன், வைசாவ், சீஷா, ஸபிராட்லி, பிரெஞ்சு-இந்து சைனு, பார்மோஸா முதலியவிடங்களில் தன் சைனியங்களை நிறுத்தியிருக்கிறது.

ஜப்பானுடைய அயல் நாட்டு மந்திரியாகிய மர்தஸ்யூகா பேசும் வார்த்தைகளும் சரியாயில்லை. 'தன் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்காக ஜப்பானுக்குச் சண்டை செய்ய இஷ்டமில்லை' என்று ஒரு சமயம் சொல்லிவிட்டு, மற்ருெரு சமயம், 'கிழக்கு ஆசியாவில் ஜப்பானுடைய நோக்கங்களை அமெரிக்கா தடுத்தால் ஜப்பான் ஐரோப்பிய யுத்தத்தில் சேர்ந்துகொள்ளும்' என்று பயமுறுத்துகிறது.

புதிதாய் நியமிக்கப் பட்டிருக்கும் ஜப்பானிய ஸ்தாநிகர் பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்டை முதல் பேட்டி கண்டபோது, ரூஸ்வெல்ட் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் பலத்த மனஸ்தாபமிருப்பதை எடுத்துக்காட்டி, இதிலிருந்து ஐரோப்பிய யுத்தமும், சீனு யுத்தமும், ஒன்றுபட்டு விடுமென்று கவலைப்பட்டார். 'நாம் யுத்தத்தில் இறங்கிவிட்டோம், இறங்கப்போகிருேம்; அதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிருேம்' என்று அமெரிக்க வியாபார காரியதரிசி சொல்லிவிட்டார். பாஸிபிக், காரிபியன் கடல்களிலிருக்கும் அமெரிக்கக் கப்பல் நிலையங்களுக்கு வரும் கப்பல்களுக்கும், விமானங்களுக்கும் எச்சரிக்கை உத்தரவை பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்ட் பிறப்பித்துவிட்டார்.

யுத்தமானது கவலைக்கிடம் கொடுக்கும்படியான ஒரு புது நிலைமைக்கு வந்துவிட்டதாக ஆஸ்திரேலியா, நியூஸிலாண்ட் மந்திரிகள் பிரசுரம் செய்கிருர்கள். ஆஸ்திரேலியத் துருப்புகள் சிங்கப்பூருக்கு வந்து இறங்கிவிட்டன. சிங்கப்பூரைச்சுற்றி கடல் வெடிகள் போடப்பட்டிருக்கின்றன. தூர-க்கிழக்கு நாடுகளிலிருக்கும் பிரிடிஷ், அமெரிக்க தேசத்தார்கள் தங்கள் சுதேசங்களுக்குத் திரும்பிவிடுவது நலமென்றும், அவரவர்களுடைய அரசாங்கங்கள் எச்சரிக்கை செய்திருக்கின்றன. ஆனுல், திகிலடைய வேண்டாமென்றும் சொல்லப்படுகிறது. **தாய்லாந்து** அடிக்கடி பிரிடனேடு சிநேகமென்று தாய்லாண்ட் சொல்லிக்கொண்டாலும், ஜப்பானிய மத்தியஸ்தத்துக்குச் சம்மதித்ததிலிருந்து சந்தேகத்துக்கு இடம் கொடுத்துவிட்டது. இதைப்பற்றி டெய்லி டெலிகிராப் பத்திரிகையின் சிங்கப்பூர் நிருபர் பின்வருமாறு 11-ம் தேதி எழுதியிருக்கிருர்.

"தாய்லாண்டுக்குச் சம்மதமில்லாவிட்டாலும், அது ஜப்பானியரின் சூழ்ச்சியால் வலைக்குள் இழுக்கப்படுகிறது. அதைத் தாய்லாண்டுக்குத் தடுத்துக்கொள்ள முடியவில்லை. நான் இந்த இரண்டு வாரங்களாகப் பார்ப்பதில் சர்வாதிகாரிகளின் கபட வழிகள் வெளிப்படுகின்றன."

அநேக ஜப்பானியர்கள் ஊரூராய்ச் சென்று தேச அமைப்பைக் கவனித்து, ஜனங்களுக்கு நேயர்கள்போல் நடித்து, உலகப் புது-இயல்-பாடத்தை ஒப்பிக்கிறார்கள். பிரிடிஷ் செல்வாக்கும் அதிகமாயிருப்பதோடு, பிரிடிஷ் சைனியங்களும் எல்லைப்புறத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இருந்தபோதிலும், பிரிடிஷ் சைனியங்களுக்குப் பயந்து ஜப்பானியரோடு தாய்லாண்டு சேரமாட்டாதென்று சொல்லுவதற்கில்லை. தாய்லாண்டிலிருக்கும் விமான நிலயங்களை ஜப்பானியர் கைப்பற்றிக்கொண்டால் அங்கிருந்து சிங்கப்பூரையும், பர்மா, இந்திய-சமுத்திரப் போக்குவரத்து வழிகளையும் எதிர்க்க வசதியேற்படும்.

**நெதர்லண்டஸ்-ஈஸ்ட்-இண்டீஸ்.**—இந்த தேசத்தோடு ஜப்பான் வியாபாரப் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறது. இதற்காக லண்டனிலிருக்கும் டச் ஸர்க்காருடன் பேச்சுக்கள் நடத்த ஜப்பான் அச்சு ஒப்பந்தம் தடைசெய்தும் சம்மதிக்கிறது.

## ஒரு வியாபார ஒப்பந்தம்.

ஸகேலின் எண்ணெய், மீன் பிடிக்கும் ஸ்வதந்திரம் இவைகளைப்பற்றி ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் ஒப்பந்தப்பேச்சுகள் நடக்கின்றன. ருஷ்யா கவர்ன்மெண்டின் ராஜீயக்கொள்கையை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அதன் அரசாங்கத்தோடு மனஸ்தாபமில்லையென்று ஜப்பான் சொல்லுகிறது.

## அமெரிக்க அபிப்பிராயங்கள்.

அமெரிக்க பிரமுகர்களான மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸூம், மிஸ்டர் வெண்டல் வில்கியும் சொல்லுவதிலிருந்து அமெரிக்கர்களுடைய அனுதாபம் பூராவாக பிரிடனுக்கு இருப்பது தெளிவாகிறது. 'பிரிடனைத் தோற்கடிக்க ஹிட்லரால் முடியாது. பிரிடிஷ்காரர்கள் வலுத்தவர்கள். பிரிடனே வெற்றியடையும். ஒரு பக்கத்துக்கும் வெற்றியில்லாமல் சண்டை சமமாய்ப்போய் நின்றுவிடாது' என்று மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் சொல்லிவிட்டார். ஸெனெட் அயல்நாட்டுக் கமிட்டியின் முன் சாக்ஷி சொல்லும்போது, மிஸ்டர் வெண்டல் வில்கி பிரிடனுக்கு மாதத்துக்கு 5-10 நாசகாரிகளை அனுப்பி, சட்டக்குயுத்திகளைக் கவனியாது, உடனே வேண்டிய உதவியைச் செய்யவேண்டுமென்றும், ஜனநாயக ஆக்ஷி நாடுகளுக்கு உதவி செய்வதில் அமெரிக்கர்களனைவரும் ஒருமனதாய் ஆதரவளிக்க வேண்டுமென்றும் இப்பொழுது ஒதுங்கி நின்றால் மனித ஸ்வதந்திரத்துக்கே ஆபத்து வந்துவிடுமென்றும் சொன்னார்.

## பிரிடனுக்கு உதவி மசோதா.

ஸெனெட்-அயல் நாட்டு கம்மிட்டியால் 8 வோட்டுகள் பாதகமாகவும் 15 வோட்டுகள் சாதகமாகவும் கொடுக்கப்பட்டு 13-ம் தேதி அங்கீகரிக்கப்பட்டது. மசோதா உடனே ஸெனெட்டின் பரிசீலனைக்கு வந்து, சர்ச்சையைத் துவக்கும்போது, 'ஹிட்லர் ஜயித்தால் ஐரோப்பா போய்விடுமென்றும்,

முஸோலினி • பிழைத்தால் ஆப்பிரிக்கா போய்விடுமென்றும்' ஸெனேட்டர் பார்க்லே எடுத்துக்காட்டினார்.

## பஞ்ச நிவாரணம்.

ஜனநாயக நாடுகளுக்கு அமெரிக்கா யுத்த தளவாடங்களைக் கொடுப்பதோடு உணவும் கொடுக்கவேண்டும் என்றும், விசேஷமாக, பிரிட்டனுக்கு ஏற்படக்கூடிய உணவுக் குறைவைத் தீர்க்க வேண்டுமென்றும், 100 பிரமுகர்கள் கையொப்ப மிட்ட மனுவொன்று அமெரிக்காவில் பிரசுரமாயிருக்கிறது. இதையும் ஆமோதித்து, பெல்ஜியம் முதலிய ஜெர்மனி பிடித்திருக்கும் ஸ்வதந்திர நாடுகளுக்கும் இம்மாதிரி உதவியைக் கொடுக்கவேண்டுமென்றும், பரீக்ஷார்த்தமாக பெல்ஜியத்தில் கஞ்சித் தொட்டிகள் (Soup-Kitchens) வைத்து, மாதத்துக்கு 50,000 டன் உணவு சமைத்து, 10-லக்ஷம் பெரிய ஆட்களுக்கும், 20,00,000 குழந்தைகளுக்கும் அன்னமிடவேண்டுமென்றும், இதன் பராமரிஷை பொது மனிதர்கள் வசமிருப்பதோடு, இந்த உணவை ஜெர்மனி அபகரிக்காதிருக்க ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டுமென்றும், மிஸ்டர் ஹெர்பர்ட் ஹூவர் ஒலிபரப்பியிருக்கிறார். தான் பிடித்திருக்கும் தேசங்களுக்கு தன்னால் உணவுகொடுக்க முடியுமென்று ஜெர்மனி சொல்லிக்கொள்ளுவதால் ஹூவர் சொல்லும் யோசனையின் அவசியம் புலப்படவில்லை. பரீக்ஷார்த்தமென்பதிலிருந்து ஹூவருக்கே இதில் திடமான நம்பிக்கையில்லாததும் வெளியாகிறது. பிரிடிஷ் முற்றுகையை இந்தச் சமயத்தில் தளர்த்தலாமாவென்பது யோஜிக்கவேண்டியது. அமெரிக்க சர்க்கார் ஆமோதித்து இந்தச் சிபார்சு வெளிவரவில்லை. பிரிடனும், ஜெர்மனியும் இதைப்பற்றி ஆலோசனை செய்கின்றன.

உரிமைப் பத்திரத்தாலும், வியாபாரிகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டும் அமெரிக்காவில் யுத்ததளவாட உற்பத்தியை ஜெர்மானியர்கள் தடுப்பதாகச் செய்தி வெளிவருகின்றன.

ரப்பர் விற்கும் 5 பெரிய அமெரிக்கக் கம்பெனிகள் ஜெர்மனிக்கு ரப்பர் விற்பதை நிறுத்திவிட்டன.

**இதாலி.**—12-ம் தேதியன்று பார்டிகெராவில் பிரான்கோ முஸோலினியை சந்தித்ததற்கும், 13-ம் தேதியன்று மான்பெலியரில் பிராங்கோ பிடேனைச் சந்தித்ததற்கும் காரணம் தெரியவில்லை. பிரான்கோ பிடேனைச் சந்தித்தது சிநேகித்தை முன்னிட்டுத்தானே ஒழிய காரியம் ஒன்றுமில்லையென்றும் சொல்லப்படுகிறது.

## விமானக் குடையாளர்கள் எதிர்ப்பு.

சில தினங்களுக்கு முன்னால் திடீரென்று சில பிரிடிஷ் விமானிகள் இதாலியின் தெற்குப் பாகங்களில் விமானக்குடைகள் கொண்டு இறங்கிச் சில நிலையங்களைப் பழுது செய்து விட்டதாகத் தெரிகிறது. விவரங்கள் ரகஸ்யமாய் வைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், இதிலிருந்து இதாலியின் தெற்குப் பாகங்களில்

சாமான்கள் போக்குவரத்துத் தடைப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அநேகமாய் வாய்க்காலை உடைப்பதற்காக வந்திருக்கலாமென்று இதாலியர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். வாய்க்கால் பழுது பட்டிருந்தால் அது உள்நாட்டுத் துரோகிகள் தான் செய்திருக்கவேண்டும்.

## ஆபிரிக்காவில் யுத்தம்.

ஸ்வதந்திர பிரெஞ்சு சைனியங்கள் சாடிலிருந்து 600 மைல் பிரவேசித்து கூப்ரா பாலைவனத்திடையேயிருக்கும் செழுமை ஸ்தலத்தை எதிர்த்தன. டொப்ருக்குக்கு 150 மைலுக் கப்பாலுள்ள ஜரபூப்பும் எதிர்க்கப்பட்டது.

**எரிடிரியா.**—வட-எரிடிரியா கரோராவுக்கு 30 மைல் தென்கிழக்கேயுள்ள எல்கீனு பிடிபட்டது. அடகா விமானங்களால் எதிர்க்கப்பட்டது.

**ஆங்கிலோ-இஜிப்ஷன்-ஸூடான்.**—இங்கே இதாலியர் வசமிருந்து கூர்முக் பிடிபட்டதிலிருந்து இந்தத் தேசத்தில் ஒருவர்கூட யில்லாமல் இதாலியர்கள் விரட்டப்பட்டு விடுவார்கள்.

**இதாலியன் ஸோமாலிலாண்ட்.**—இங்கே ஆப் மாடுவென்ற தலைநகரும், கிஸ்மாயுவென்ற மூன்றாவது பெரிய துறைமுகமும் பிடிக்கப்பட்டு, ஜூபா நதியும் தாண்டப்பட்டு, வேல்ஸுக்குச் சரியான 10,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள பாகம் பிரிடனுக்குக் கைவசமாய் விட்டது.

**அபிஸீனியா.**—தேசபிமானிகளின் உதவியைக்கொண்டு இங்கே கஜ்ஜம் பிராந்தியத்தில் டாங்கிலா முதலிய முக்கியமான இடங்கள் பிடிக்கப்பட்டன.

பிரிடிஷ் சிப்பாய்களின் வீரத்தைக் காண்பிக்கும் மூன்று கதைகளைக் கீழே காணலாம்.

சில பிரிடிஷ் சிப்பாய்களும், ஆஸ்திரேலிய சிப்பாய்களும் சேர்ந்துகொண்டு கோடைக்கும், பாலைவனத்துக்கும் அஞ்சாமல், 1,000 மைல்கள் உட்சென்று வேவு பார்த்து வட-எகிப்தைப் படையெடுக்க இதாலியர்கள் செய்திருந்த ஏற்பாடுகளைக் கண்டுபிடித்து, அவைகளைக் கெடுத்து சில தனித்த இடங்களைப் பிடித்து, எண்ணெய் நிலையங்களுக்குத் தீவைத்து, தரையில் தங்கியிருக்கும் விமானங்களையும் அழித்து விட்டார்கள்.

வேறுசில பிரிடிஷ் சிப்பாய்கள் ரகஸ்யமாக அபிஸீனியாவுக்குள் நுழைந்து, உள்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து அவர்களுக்குத் துப்பாக்கி முதலிய யுத்த தளவாடங்களைக் கொடுத்தார்கள். இவர்களுடைய தலைவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பணப் பரிசு கொடுப்பதாக இதாலிய கவர்ன்மெண்டு சொல்லியும், இதாலிய சைனியங்கள் வளைத்துக்கொண்டும், இவர்கள் ஒரு கணவாய் வழியாகத் தப்பி ஓடி, இப்பொழுது கஜ்ஜம் மலையில் நிலைத்துக்கொண்டு அங்கிருந்து இதாலியர்களை விரட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும், புண்டராசே அல்லது 'நமது துவஜம்' என்கிற இல்வசப் பத்திரிகையொன்று இப்பொழுது அபிஸீனியாவில் வெளிவருகிறது. இது ஒரு பால்ய பிரிடிஷ் சிப்பாயின் முயற்சியாகும். இது ஆரம்பத்தில் 60 ஒட்டகங்களின் மேல் அச்சிடும் தளவாடங்களும் சிப்பந்திகளும் ஏற்றப்பட்டு, ஊரூராகச் சென்று ஹெய்லிஸெலாஸியின் அறிக்கையைப் பிரசுரித்தது. இப்பொழுது கஜ்ஜத்தில் அச்சுக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டு, பத்திரிகை ஒழுங்காகப்போட்டு, ஊரூராகத் துப்பாக்கி ஈட்டி அணிந்த வாலிபர்களால் இனமாகக் கொடுக்கப்படுகிறது.

அல்பேனியா.—தன்னுடைய சிப்பாய்களேயும், ஊர் ஜனங்களேயும் படுத்துகிற பாட்டிலிருந்து இதாலிய சேனாபதியான காபலெரோவுக்குக், 'கசாயிக்காரன்' என்ற பெயர் வந்துவிட்டது. 50 தடவை திருப்பித் திருப்பி எதிர்த்தும் கிரேக்கர்களே அசைக்க முடியவில்லே. வியாழக்கிழமை முதற்கொண்டு ஆக்ரிடா ஏரியிலிருந்து கடற்கரை வரையில் 80 மைலுக்கு கிரேக்கர்கள் படையெடுக்க ஆரம்பித்து விட்டார்கள். வலோனா இன்னும் பிடிபடாததற்குக் காரணம் மாரியின் கடுமைதான்.

## கடற் சண்டை.

மெடீராவுக்கும், அஸோர்ஸுக்கும் மத்தியில் பிரிடிஷ் துணையோடு சென்ற 6 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அதில் இருந்தவர்கள் தப்புவதற்கு எதிரி இடம் கொடுக்காது அநியாயமாய் மாண்டனர்.

## விமானப்போர்.

ஜெர்மனியின் வட கிழக்குப் பாகம், ஹாலண்டு, நார்வே டென்மார்க் முதலியவிடங்களே பிரிடிஷ் விமானங்கள் படையெடுத்தன. 14-ம் தேதி பொறி கலங்கும்படி பொலாயின் எதிர்க்கப்பட்டது. சனிக்கிழமை, போகவர 1,800 மைல் பறந்து, பிரிடிஷ் விமானங்கள் போலண்டில் கடோவிகெ, க்ராகாவ் நகரங்களில் பத்திரிகைகளேப் போட்டுவந்தன.

மத்தியதரைக்கடலில் டாடிகானிஸ் தீவுகள் தகர்க்கப்பட்டன. காஸ் என்ற தீவில் சேதமதிகம். பசியால் 5, 10 பேர்கள் தினசரி இந்தத் தீவுகளில் இறப்பதாகத் தெரிகிறது.

17-ம் தேதியோடு முடிவாகும் 11 தினங்களில் மால்டா 63 தடவை விமானங்களால் எதிர்க்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையன்று 6 தடவைகள் விமானங்கள் வந்தன.

## பிரிடன்.

17-ம் தேதி ஆஸ்திரேலியத் தொழிலாளிகளுக்குச் செய்த ஒலிபரப்புப் பிரசங்கத்தில் மிஸ்டர் எர்னஸ்ட் பெவின் தற்போது பிரிடனில் செய்யும் தொழில் ஏற்பாடுகள் கட்டாயத்தொழில் முறையில் சேர்ந்தன வல்லவென்றும்,

ஸர்வ தொழிலாளிகளுக்கும் பொதுவாக யுத்த சகாயம் செய்ய இருக்கும் எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்காக, அவரவர்களுக்குத் தக்கவேலைகளை கொடுப்பதற்காக, தொழிலாளர்கள் கணக்கெடுக்கப்படுவதுதானென்றும், சென்ற யுத்தத்திலிருந்தபடி முதலாளிகள்—கழுகுகளைப்போல் லாபமடிக்க மாட்டார்களென்றும், அவ்விதம் செய்யும் முதலாளிகளை ஸர்வ ஜனங்களும் வெறுக்கிறார்கள் என்றும் எடுத்துக்காட்டினார்.

மிஸ்டர் கிரீன்வுட் என்ற மந்திரி பிரிட்டனுடைய அபிவிருத்திக்கான, யுத்தத்துக்குப்பின் நடக்கவேண்டிய காரியங்களைக் கவனித்துவருகிறார். பிரிடிஷ் சிப்பாய்களுக்கு யுத்தம் நின்ற பின் கொடுக்கவேண்டிய வேலை, விவசாயச் சீர்திருத்தம், வீடுகள், கட்டடங்களின் புனருத்தாரணம் முதலிய விஷயங்கள் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. யுத்த சமயத்தில் வரக்கூடிய லாபம் முழுவதும் தற்சமயம் வரியாக வசூலிக்கப்படுகிறது. இதில் பாதியை நிறுத்தி வைத்து, யுத்தம் முடிந்த பிறகு தொழில்களைச் சமாதான காலத்துக்குத் தக்கபடி திருப்பியமைக்க யோசனை நடக்கிறது.

---

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 10—2—41. (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—கப்பல் துறைகள், கப்பல்கள், கட்டடங்கள்—டன்கர்க் (Dunkrik), புலாயின் (Boulogne), கலே (Calais). | ...... | கப்பல்களின் மேல் குண்டுகள் வீழ்ந்தன. கட்டடங்கள் இடிந்தன. பலத்தசேதம். 3 விமானங்கள். |
| | படையெடுப்பு.—பிரஞ்சு (French)-க் கடற்கரை. | 1 விமானம். | |
| | இரவில்.—ஜெர்மனியினுடைய முக்கியமான ரயில் சந்திப்புகள், தொழிற்சாலைகள்—ஹானோவர் (Hanover). | ...... | பலத்தசேதம். |
| | எண்ணெய் ஸ்தாபனங்கள்.—ராட்டர்டாம் (Rotterdam) கடற்கரையில். | ...... | தீயும், வெடிச்சத்தங்களும் கிளம்பின. |
| | பல முக்கியமான இடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **10—2—41.** | (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—*தொடர்ச்சி.*** | | |
| | 2 விமான நிலயங்கள்.—*ஹாலந்து* (Holland). | ...... | *சேதமாயிற்று.* |
| | துறைமுகம்.—*புலாயின்* (Boulogne). *செர்பரோ* (Cherbourg), *ஆஸ்டெண்ட்* (Ostend). | ...... | ...... |
| | | 4 *விமானங்கள்.* | |
| | விமான யுத்தம்.—*கிழக்குக் கடற்கரை.* | ...... | 2 *விமானங்கள்.* |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானச்சண்டை.—*அஸ்மாரா* (Asmara). | ...... | 2 *விமானங்கள்.* |
| | ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—*அப்மாடு* (Afmadu). | ...... | ...... |
| | மோட்டார் வண்டிகளில் ஏற்றுமதி இறக்குமதி செய்யுமிடம்.—*அஸ்மாரா* (Asmara). | ...... ...... | ...... ...... |
| | ஒரு காட்டிற்குள்ளிருக்கும் சாமான் கிட்டங்கிகள், ரயில் பாதைகள்.—*கெரேனு* (Cheren)*க்கு சமீபத்தில்.* | ...... | ...... *தீப்பிடித்தன.* |
| | உள்நாட்டுச் சைனியங்கள்.—*கலான்* (Kalan) *பிரதேசம்.* | *நஷ்டமில்லை.* | ...... |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | ரஸ்தா.—*எல்பஸானி* (Elbasan)*லிருந்து வலோனு* (Valona) *வரை.* | ...... | ...... |
| | பட்டணம், துறைமுகம்.—*வலோனு* (Valona). | ...... | ...... |
| | இதாலிய சைனியங்கள், பின்னணித் துருப்புகள்.—*எல்பஸானு* (Elbasan)*க்கும், சைனியங்களின் முன்னணிக்கும் மத்தியில்.* | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **10—2—41.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ரோட்ஸ் (Rhodes)-த்தீவு.** | | |
| | விமானக் கூடங்கள், இராஜாங்க காரியாலயங்கள்.—*மாரிட்ஸா* (Maritza). | ...... | ...... |
| | விமான நிலயம்.—*கலாடோ* (Calato) ... | ...... | *தரையில் இருக்கும் 3 விமானங்கள் நாசமாயின.* |
| | விமானங்கள், கட்டடங்கள்.—*கடாவியா* (Katavia), *டெபெலேனி* (Tepeleni), *டெகி* (Deki). | ...... | *தீயும், வெடிகளும் கிளம்பின.* |
| **11—2—41** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | தொழிற் சாலைகள்.—*ப்ரமன்* (Bremen) *ஹானோவர்* (Hanover). | ...... | *தீயும், வெடியும் கிளம்பின.* |
| | எண்ணெய் ஸ்தாபனம்.—*ராட்டர்டாம்* (Rotterdam). | ...... | *பலத்த வெடிகள் கிளம்பின.* |
| | கப்பல்கள்.—*நார்வே* (Norway)-*யிலிருக்கும் க்ரிஸ்டியன்ஸண்ட்* (Christiansund). | ...... | ...... |
| | கடல் விமான நிலயம்.—*ஜட்லண்ட்* (Jutland). | *1 விமானம்.* | *3 விமானங்கள்.* |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ராணுவ விமான நிலயம்.—*அட்டிஸ் அபாபா* (Addis Ababa). | ...... | *கட்டடங்களும், விமானக் கூடங்களும் இடிந்தன.* |
| | மோட்டார் வண்டிகள்.—*கெரனு* (Cheren)*க்கும், அஸ்மாரா* (Asmara) *வுக்கும் மத்தியிலுள்ள ரஸ்தா.* | ...... | *குண்டுகளால் சுடப்பட்டது.* |
| | சாமான் கிட்டங்கிகள்.—*கெரனு* (Cheren)*க்கு வடகிழக்கே.* | *1 விமானம்.* | |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 11—2—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.— கடானியா (Catania). | ...... | தரையிலிருக்கும் 4 விமானங்கள் நாசமாயின. தீப்பற்றியது. |
| | விமான நிலயம்.—கோமிஸோ (Comiso) | நஷ்டமில்லை. | பெரிய தீ கிளம்பிற்று. |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | விரோதிசைனியம்.—க்ளிஸூரா (Klissura) வுக்கு வடக்கே. | ...... | ...... |
| | விமானச்சண்டை.—க்ளிஸூரா (Klissura) | ...... | ...... |
| 12—2—41. (புதன்கிழமை). | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா—(Africa).** | | |
| | ரயில்வேஸ்டேஷன், கிடங்குகள், மேட்டார் வண்டிகள், பீரங்கி பொருத்திவைக்கப் படும் இடங்கள்.—கெரன் (Cheren) பிரதேசம். | ...... | தகர்க்கப்பட்டன. |
| | ராணுவசாமான் கிடங்குகள்.—ஓர்தி (Orti) | ...... | ...... |
| | சாமான்கிடங்குகள், இன்னும் மற்ற ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—அஸாப் (Assab). | | தீப்பிடித்தன. |
| | கட்டடங்கள்.—அப்மாடு (Afmadu) | ...... | நாசமாயின. |
| | மோட்டார் லாரிகள்.—ஜெலிவு (Jeliv)க்கும் ப்ராவா (Brava)வுக்கும் மத்தியில். | நஷ்டமில்லை. | தீப்பிடித்தன. |
| | பென்காஸி (Benghazi) | ...... | ...... |
| | **ரோட்ஸ் (Rhodes) தீவு.** | | |
| | கடற்படைத்துறைமுகம்.—ரோட்ஸ் (Rhodes). | ...... | தீப்பிடித்தது. பலத்த சேதம். |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 12—2—41. | (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | விமானக்கூடங்கள், விமானக் கட்டடங்கள்.— டிராணு(Tirana), ட்யூராஸோ (Durazzo). | ...... | டிராணுவில் தரையிலிருக்கும் 4 விமானங்கள் நாசமாயின. |
| | ரா்ணுவங்கள், ராணுவ சாமான்கள், கட்டடங்கள்.—எல்பஸான் (Elbasan). | ...... | சேதமாயின |
| | விமானச்சண்டை.—பெராட் (Berat) பிரதேசங்கள். | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| 13—2—41. | (வியாழக்கிழமை). | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | துறைமுகம், கதவுகள்போட்ட அணை.—டென் ஹெல்டர் (Den Helder). | ...... | ஒரு கப்பலின்மேல் குண்டுவிழுந்தது. |
| | கப்பற்துறைமுகம்.—கலே (Calais). | ...... | ...... |
| | எண்ணெய்க் கப்பல்.—நார்வே (Norway) கடற்கரை. | ...... | தீப்பிடித்தது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ரயில்வே ஸ்டேஷன்.—கெரென் (Cheren) | ...... | ...... |
| | விரோதி சைனியங்கள்.—மவுண்ட் அம்பா (Mount Amba). | ...... | பலருக்குக் காயம். |
| | அரசாங்க காரியாலயங்கள்.—பார்டீரா (Bardera). | ...... | குடிதண்ணீர் இலாகா சேதமாயிற்று. |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | விமான நிலயம்.—டெபெலேனி(Tepeleni) | ...... | தீப்பிடித்தது. |
| | சைனியங்கள் தங்குமிடம், மோட்டார் வண்டிகள்.—டூகி (Duki). | ...... | ...... |
| | சைனியங்கள்.—டூகி (Duki)க்குத் தெற்கே | நஷ்டமில்லை. | 1 விமானம். |
| | **டோடிகானீஸ் (Dodecanese) தீவுகள்.** | | |
| | விமான நிலயங்கள்.–கடாவியா (Catvia), கலாடோ (Calato). | ...... | முக்கியமான சேதம் அதிகம். |
| | மிடிபே.—(Midibay) ... | ...... | 1 விமானம். |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 14—2—41. | (வெள்ளிக்கிழமை). | | |

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—ஜெர்மன் படையெடுப்பு ஸ்தலங்கள்.—பிரெஞ்சு (French)-க் கடற்கரை, கலே (Calais), காப்க்ரினே (Cap Gris Nez). | ...... | பிரெஞ்சுக் கடற்கரை முழுவதும் ஒரே ஜோதிமயம். |
| இரவில்—ஹிட்லரி (Hitler)-ன் படையெடுப்புத்துறைமுகங்கள்—புலாயின் (Boulogne) உள்பட பிரெஞ்சு (French)-க் கடற்கரை முழுவதும். | ...... | எங்கு பார்த்தாலும் ஒரே நெருப்பு. |
| தொழிற்சாலைகள்.—ரூர் (Ruhr) ... | ...... | ...... |
| விமான நிலயங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holland). | ...... | சேதமாயின. |
| எண்ணெய் ஆலைகள்—கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen). | ...... | தீப்பிடித்தன. |
| உள்நாட்டுத் துறைமுகம்—டூயிபர்க் (Duisberg)—ரூரார்ட் (Ruhort). | ...... | ...... |
| கப்பல் துறைகள்-ஆஸ்டெண்ட் (Ostend) | நஷ்டமில்லை. | பலத்த நஷ்டம். |

## மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | |
|---|---|---|
| வியாபரக்கப்பல்கள்—மத்தியதரைக் கடலி (Mediterranean)ன் மத்தியில். | ...... | 1 கப்பல் மூழ்கிற்று. |

## அல்பேனியா (Albania).

| | | |
|---|---|---|
| விரோதி சைனியங்கள்—டெபெலெனி (Tepeleni)-க்கு வடக்கேயுள்ள பிரதேசங்கள். | ...... | பலருக்குக்காயம். |
| பீரங்கிகள் பொருத்தி வைக்கப்படும் இடங்கள், ரஸ்தா வழியே போய்க்கொண்டு இருக்கும் மோட்டார் வண்டிகள், சைனியங்களின் கூடாரங்கள், ராணுவ கட்டடங்கள்—புஸி—(Buzi)-க்கும் க்ளேவு (Glave)-க்கும் நடுவிலுள்ள ரஸ்தா. | ...... | பலத்த சேதம். |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 14—2—41. | (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **அல்பேனியா (Albania)—தொடர்ச்சி.** | | |
| | பீரங்கிகள் வைத்திருக்கும்இடங்கள்—காம்ஷிஷ்ட் (Kamshisht) கிராமம். | ...... | குண்டுகளால் சுடப்பட்டன. |
| | பாதுகார்த்தல்—முன்னேறும் கிரேக்கத் துருப்புகள், டிராணு (Tirana) எல்பஸான் (Elbasan). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ரயில் பாதையில் ஒரு இடம்.—கெரென் (Cheren). | ...... | ...... |
| | விமான நிலயங்கள்.—ஜூலா (Zula), அஸ்மாரா (Asmara). | ...... | 2 விமானங்கள். |
| | விரோதியின் சைனியங்கள் தங்குமிடம்.—டாங்கிலா (Danghila). | ...... | ...... |
| | **டோடிகானீஸ் (Dodecanese) தீவுகள்.** | | |
| | கட்டடங்கள்.—லிண்டோ (Lindo) துறைமுகம். | ...... | தீப்பிடித்தன. |
| 15—2—41. | (சனிக்கிழமை). | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | எண்ணெய் ஆலைகள், உள்நாட்டுத் துறைமுகம், விமான நிலயங்கள்.—மேற்கு ரூர் (Ruhr). | ...... | பல இடங்களில் பெருந்தீ கிளம்பியது |
| | துறைமுகம்.—ராட்டர்டாம் (Rotterdam) | ...... | ...... |
| | கப்பல்துறைகள்.-புலாயின் (Boulogne), கலே (Calais). | 2 விமானங்கள். | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| | துண்டுபிரசுர வினியோகம்.—போலாந்தி (Poland)லுள்ள காடோவிஸ் (Katowice), க்ராகோ (Cracow) பிரதேசங்கள். | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 15—2—41. | (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | ராணுவங்கள் தங்குமிடம், சாமான் கிட்டங்கிகள், பீரங்கிகள் வைக்குமிடங்கள், மோட்டார் வண்டிகள், கோவேறு கழுதைக் கூட்டங்கள்.—புஸி (Buzi) பிரதேசம். | ...... | ...... |
| | படையெடுப்பு.—டெபெலேனி (Tepeleni) பிரதேசம். | ...... | பலத்த சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | தோணிப் பாலங்கள், மின்சாரக் கம்பிகள், சைனியங்களை வராமல் தடுக்க கட்டடங்கள்.—இதாலிய ஸோமாலிலாண்டு (Somaliland). | ...... | பலத்த சேதம். |
| | மோட்டார் வண்டிகள்.—மெர்கா (Merca) பார்தீரா (Bardera) ரஸ்தா. | ...... | 3 லாரிகள் நாசமாயின. |
| | உள்நாட்டு மனிதர்களுக்குப் பேட்டி அளித்தல் முதலிய விசேஷக் கூட்டங்கள்.—ஓமோ (Omo) நதிப் பிரதேசம். | ...... | தீப்பிடித்தன. |
| | மோட்டார் வண்டிகள்.—அபிஸீனியா (Abyssinia). | ...... | பலத்த நஷ்டம். |
| | விரோதி சைனியங்கள், மோட்டார் வண்டிகள், ராணுவ முக்கியமான இடங்கள்.—எரிட்ரியா (Eritrea). | ...... | ...... |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | விமானக் கூடங்கள், இராஜாங்க காரியாலயங்கள்.—கடானியா (Catania). | ...... | தரையிலிருக்கும் விமானங்கள் நாசமாயின. தீயும் வெடிகளும் கிளம்பின. |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—காஸிமோ (Cosimo). | ...... | தீப்பிடித்தன. |
| | விமான நிலயம்.—கெலா (Gela) ... | ...... | ...... |
| | தீபஸ்தம்பம்.—கேப் பாஸ்ஸிரோ (Cape Passero). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **15—2—41** | (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலி (Italy).** | | |
| | விமானக் கூடங்கள், இராஜாங்க காரியாலயங்கள்.—பிரிண்டிஸி (Brindisi). | ...... | பலத்த சேதம். தீப்பிடித்தன. |
| **16—2—41.** | (ஞாயிற்றுக்கிழமை.) | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.-கப்பல்துறைப் பக்கத்தில் நிறுத்தி இருந்தும் ஒரு சிறிய கப்பல்.—ஹெல்லி வோயட்ஸ்லூயிஸ் (Hellevoetsluis). | ...... | ...... |
| | கப்பல்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை. | ...... | ...... |
| | ஸீப்ரக்கே.—(Zeebrugge), மிடில்பர்க் (Middleburg), டென் ஹெல்டர் (Den-helder). | ...... ...... | ...... சேதமாயின. |
| | **அல்பேனியா (Albania)** | | |
| | விரோதி சைனியங்கள்.—டெபெலெனி (Tepeleni)-க்கு வடக்கே புஸி (Buzi) பிரதேசம். | ...... | ...... |
| | பீரங்கிகள் பொருத்திவைக்கப்படும் இடங்கள், ராணுவ கட்டடங்கள்.—புஸி (Buzi). | ...... | கட்டடங்கள் இடிந்தன. |
| | விரோதி சைனியங்கள், வண்டிகள், மோட்டார் வண்டிகள்.—லாயூஸா (Lauiza). | ...... | ...... |
| | பின்னடையும் இதாலிய துருப்புகள், மோட்டார் வண்டிகள்.—க்ளிஸீரா-பெராட் (Klissura-Berat) ரஸ்தா. | ...... | பலத்தசேதம் 1 விமானம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சைனியங்கள் வசிக்குமிடங்கள், கட்டடங்கள்.—கெலிப் (Gelib). | ...... | தீப்பிடித்தன. |
| | வேவுபார்த்தல்.—ஜூபா (Juba) நதிக்குக் கிழக்கே. | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 16—2—41. | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | விமானச் சண்டை.—கூரா (Gura), கெரென் (Cheren). | ...... | பல விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன. |
| | தரையிலிருந்தும் விமானங்கள், சாமான் கிடங்குகள்.—அபிஸீனியா (Abyssina) விலிருக்கும் சினெல்லி (Chinelli). | ...... | ...... |
| | விமானச் சண்டை.—பென்காஸி (Benghazi). | ...... | 1 விமானம். |
| | ஒரு வியாபாரக்கப்பல்.—டூனிஸ் (Tunis) கடற்கரை. | 1 விமானம். | கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. |
| | விமானக் கூடங்கள், கட்டடங்கள், ரிப்பேர் செய்யுமிடங்கள்.—எரிட்ரியா (Eritrea) விலுள்ள அடாகா (Adaga). | ...... | பலத்த சேதம். |

---

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 11—2—41. | (செவ்வாய்க்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விமான நடவடிக்கையே இல்லை ... | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | ப்ளோரினு (Florina), ஜன்னினு (Jannina). | 4 விமானங்கள் பல சேதமாயின. | சில பொது ஜனங்கள் மாண்டனர். |
| 12—2—41 | (புதன்கிழமை). | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | காலையில்.—கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland). | 1 விமானம். | சேதமேயில்லை. |
| | இரவில்.—படையெடுப்பே இல்லை ... | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) ... | ...... | சொற்பச் சேதம். |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **13—2—41** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | இரவில்.—லண்டன் (London), பிரதேசம், வடகிழக்கு ஸ்காத்லாந்தி (Scotland)-ல் ஒரு பட்டணம், | ...... | வீடுகளுக்குச் சேதம். சிலருக்குக் காயம். |
| | கிழக்கு இங்கிலாந்தி (England)-ல் சில இதர இடங்கள். | ...... | சேதமே இல்லை. |
| **14—2—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—டோவர் (Dover) பிரதேசம் | 1 விமானம். | ...... |
| | இரவில்.—லண்டன் (London) பிரதேசம் வடகிழக்கு ஸ்காத்லாந்தி (Scotland)-ல் ஒரு இடம்; கெண்ட் (Kent). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) ... | ...... | மிகச்சொற்ப சேதம். துரத்தியடிக்கப் பட்டன. |
| **15—2—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), கிழக்கு ஆங்கிலியன் (Anglian) கடற்கரை. | ...... | சேதமேயில்லை. சிலருக்குத்தான் காயம். |
| | கெண்ட் (Kent) கடற்கரை ... | 2 விமானங்கள் | 2 விமானங்கள். |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் | ...... | மொத்தசேதம் மிகவும் குறைவு. சில வீடுகள் சேதமாயின. |
| | சில இடங்கள்.—லண்டன் (London) பிரதேசம், வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland). | ...... 3 விமானங்கள். | தீப்பிடித்தன. சிலருக்குக் காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) 3 தரம். | ...... | ...... |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **16—2—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தெற்குக்கடற்கரை, லண்டன் (London) பிரதேசத்தில் 3 இடங்கள், தென்கிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள், ஹோம் கவுண்டீஸ் (Home Counties). | ...... | சொற்ப சேதம். சிலருக்குக் காயம். சில வீடுகளுக்குச் சேதம். |
| | இரவில்.—ஒரு வடகிழக்குக் கடற்கரைப் பட்டணம்; கிழக்கு ஆங்கிலியா (Anglia) | ...... | சேதமுமில்லை. காயமுமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta)—10 தரம். | ...... | சொற்பச் சேதம். |
| **17—2—41** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | பகலில்.—கிழக்கு ஆங்கிலியன் (Anglian) கடற்கரை. | 3 விமானங்கள். | ...... |
| | இரவில்.—லண்டன் (London), அதைச் சுற்றியுள்ள பிரதேசங்கள், கிழக்கு ஆங்கிலியா (Anglia) வடகிழக்கு கடற்கரைப் பட்டணம். | ...... | சிலர் மாண்டனர். சொற்பச் சேதம். |

# யுத்தக் குறிப்புகள்.

## மேளம் கட்டியாகிவிட்டது.

ஐரோப்பாவை ஒரு கொடி கூடத்திற்கு ஒப்பிடலாம். மல்யுத்தம் செய்யப் போகும் 'வஸ்தாத்' பயங்கரமாக விழித்துக்கொண்டு இங்குமங்கும் பாய்ந்து எவ்வளவு தினுசாய்க் குஸ்திசெய்யமுடியுமென்று காண்பிக்கிறான். மத்தியில் அவனுடன் பேட்டிக்குவந்தவன் பரபரப்பில்லாமல் நிம்மதியாக இருந்து அவனை கவனித்துக்கொண்டு தன்மேல் அடிபடாமல் பார்த்துக்கொண்டு சமயம் பார்த்து எதிராளிமேரில் தாக்கி குஸ்தி செய்கிறான். ஒவ்வொரு மூலையிலும்

இவர்களின் சிநேகிதர்கள் சவடாலாய் பேசிக்கொண்டும், புரளிபண்ணிக் கொண்டும் வேடிக்கைபார்க்கிறார்கள்; சிலர் தாங்கள் ஆதரிக்கும் வஸ்தாத் களைத்துப்போகாமலிருக்கும்படி வேண்டியதைச் செய்கிறார்கள். ஆரம்பத்தில் இரண்டு தபா 'வஸ்தாத்' வேலை பலிக்கக்காணோம்; எல்லோருக்கும் இது ஆச்சரியமாகயிருக்கிறது; ஆயினும், 'வஸ்தாத்தின்' ஜோர் குறையவில்லை, உடம்பும் தளரவில்லை, எப்பாடுபட்டும் வெகு சீக்கிரம் எதிரியை ஒரு கைபார்த்து விடுவதாகத் தீர்மானிக்கிறான். ஆனால், எல்லாம் மாறிவிட்டது; இன்னும் இரண்டொரு 'ரவுண்ட்' ஆனால் மத்தியில் நிற்கும் பேர்வழி பக்கம் சபை யோருக்கு உற்சாகம் திரும்பிவிடும்; ஏனென்றால், நேரம், ஆக ஆக, அவன் சரீரம் கட்டியாயும் வெகுநல்ல நிலையிலுமிருக்க காணப்படுகிறது. சரீரம் வலுவாக இருக்கிறது. சதை நரம்பு எல்லாம் 'பக்கா' வாகவிருக்கின்றன. சுவாசம் சுலப மாகவும் வசப்பட்டுமிருக்கிறது. அவன் கொடுக்கும் குத்துகளின் பலமும் அதிகரிக்கிறது.

## 'கலப்பு' எப்போ?

இந்த உபமானத்தைவைத்தே பேசுவோம். பிரிடனிலும் அல்பேனியாவி லும், ஆபிரிக்காவிலும் நாஸிகள் உதை வாங்கியபின், வேறு எங்கு தாக்கலாம் என்று ஆத்திரமாய்ப் பார்க்கிறார்கள்; எப்பாடுபட்டும் எந்த திரப்பு ஜாஸ்திகாலம் நிர்வகித்துநிற்கும் என்ற பரிசோதனைக்கே இடமில்லாமலிருக்கும்படி செய்ய வேணுமென்று பார்க்கிறார்கள்.

ஆகையால், பாஸ்பரஸ் (Bosphorus) ஜலசந்தியிலிருந்து ஷெட்லந்த் (Shetlands) தீவுகள்வரையுள்ள ஒரு சதுரங்கத்தில் எல்லா வேலையும் செய்து பார்க்கிறார்கள். பயமுறுத்துகிறார்கள். தந்திரமந்திரங்கள் செய்கிறார்கள். துருப்புகள் சேகரிக்கிறார்கள். போக்குவரத்து சாதனங்கள் சேகரிக்கிறார்கள். தங்கள் நோக்கங்கள், பயங்கள் முதலியவைகளைப்பற்றி விதம்விதமாகப் பேசுகிறார் கள்; இவ்விதமே நடுநிலைமை நாடுகளைப்பற்றியும் ஆக்கிரமண நாடுகளைப்பற்றியும் பிரிடனின் அக்கிரமச் செய்கைகளைப்பற்றியும், பிரிடனின் எதிர்க்கும் சக்தியைப் பற்றியும் ஒருசமயம் சொன்னதுபோல் ஒரு சமயம் சொல்லுகிறார்களில்லை, இருந்தபோதிலும் எக்காலத்திலுமில்லாத விதமாக ஒரு மகத்தான தாக்கல் நெருங்கிவருகிறதென்று தெரிகிறது. Mr. சர்ச்சில் (Mr. Churchill) அப்படித் தான் என்கிறார்; அவருக்குத் தெரியாததொன்றுமில்லை. சூக்ஷமமாகப் பார்த்தால் அவர் அது வரவேணுமென்று ஆசைப்படுகிறார். சரித்திரம் படித்தவர்களும், யுத்தமுறையில் தேர்ந்தவர்களும், அதை ஆமோதிப்பார்கள். ஏனென்றால், இரண்டு முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன.

(1) இவ்வளவு மகத்தான காரியம் நடக்கவேண்டுமானால், ஹிட்லருக்கு ஆகாய ஆதிக்கம் இருக்கவேணும்; கடலிலும் சுமாரான சமபலம் வேணும். இவை இரண்டும் அவனுக்கில்லை. பிரிடிஷ் விமானப்படையின் வேலை எல்லோ ராலும் புகழப்படுகிறது; மேலும், ஆரம்பத்திலிருந்ததற்கு இப்போது அதன்

சங்கியை அதிகரித்துவிட்டது. கடலில் பிரிடனின் ஆதிக்கம் எப்போதும்போ லிருப்பதுடன் நாளுக்குநாள் ஜாஸ்தியாகிறது.

(2) ஜெர்மனியின் அதிகாரம் ஐரோப்பாவில் பரவப்பரவ, அதன் ராணுவ பலமும் இலாகாக்களும் பரப்பப்பட்டு, அதனால் பலக்குறைவு ஏற்பட்டு, விரோத பாவமுள்ள தேசத்தாரை அடக்கியாளுவது சிரமசாத்தியமாகிறது.

## பிடேனின் அழுத்தம்.

அச்சுதேசத்தாருடனும் அதன் பழைய சிநேக தேசத்துடனும் சேராத போனால் பிரான்ஸ் என்னபாடு படுத்தப்படுமென்று கேட்டு சில வாரங்களாக உடம்பெல்லாம் நடுக்கமெடுத்தது. பிரான்ஸ் சேர்ந்துவிட்டால் மோசமொன்று மில்லை; விரோத தேசத்தின் ஒரு பெரிய பாகம் ஜெர்மனியின் ஆதிக்கத்திற்குட் பட்டதென்பதை விற வேறொன்றுமில்லை; தளகர்த்தர் பிடேனுக்குத் தெரிந்த படி, பிரான்ஸின் அந்நிய நாடுகளெல்லாம் பிரிடிஷ் ஆதிக்கமுள்ள கடலின் ஒரு பக்கமிருக்கின்றன. அவசியமானால் பிரெஞ்சு கப்பற்படையும் பிரிடன் பக்கமாகி விடும். உண்மையில், ஹிட்லர் மிரட்டலுக்கு அசப்பட்டுக்கொண்ட மற்ற தேசங்களைக்காட்டிலும் ஆக்ரமிக்கப்படாத பிரான்ஸ் நல்ல ஸ்திதியிலிருக்கிறது; ஹிட்லர் மிரட்டலுக்கு ஆறு மாதகாலமாக பிடேன் அஞ்சாமலிருந்ததே அவர் பலத்தையும் ஹிட்லர் ஏமார்ந்துபோனதையும் நிரூபிக்கிறது. சென்ற ஜூலையில் ஹிட்லர் செய்த யோசனையெல்லாம் வீண் யோசனைகளாயின. நார்வே யிலிருந்து பிஸ்கே விரிகுடாவரை ஐரோப்பிய கடற்கரை நாஸிகள் வசமிருந்த தால் பிரிடனை தஞ்சமடையச்செய்யலாமென்று எண்ணியிருந்தார்கள்; மத்திய தரைக்கடலின் சுவாதீனமும் அவர்களுக்கு அவசியமென்று பின்னால் தெரிகிறது; அதுவும் அமெரிக்காவிலிருந்து நாளுக்குநாள் அதிகரிக்கும் உதவியைப்பார்க்க இந்த சுவாதீனமும் அதிவிரைவில் கிடைத்தால்தான் ஆகும் என்று (அவர்களுக்கு) ஏற்படுகிறது.

## பசியும் உணவின் தேவையும்.

பஞ்சமோ அல்லது பஞ்சம் போன்ற நிலையோ உண்டாக்குவதானது மனித னின் நியாயமான நடவடிக்கை இருக்கவேண்டிய முறையைக் கவனித்தால், ஒழுங் கற்றதும் சமூகவிரோதமுமானது; இதை வைத்து ஜெர்மன் பிரசார இலாகா பிரிடன் (அவர்களுக்கேற்க) சாமான்கள் போய்ச்சேராமல் செய்யும் மறியலைப்பற்றி முடிந்தவரையிலும் "ஆக்கிரமண" நாடுகளில் பிரசாரம் செய்து பார்க்கிறார்கள். Dr. கோயபல்ஸ் செய்யும் தர்மவிசாரணைகளைக்காட்டிலும் பொது மக்களிடமன்பு கொண்டவர்களும் அமெரிக்க Mr. ஹூவர் (Mr. Hoover) தலைமையிலுள்ளவர் கள் இப்பிரசாரங்களைக் கொஞ்சம் ஆதரவுடன் கேட்கிறார்கள். அவர்கள் தங்கள் ஹிருதயத்தைக்கொண்டு மனதை ஏமாற்றிகொள்ளுகிறார்கள்.

(1) கைவசம் செய்த நாடுகளைக்கொள்ளையிடுவதென்று தங்களுக்குள்ள யோசனையை ஜெர்மானியர் மறைக்கவில்லை. இவ்விதம் செய்வதில் "கணக்கிற் கடங்காத லாபம்" இருக்கிறதென்று ஹிட்லர் பேச்சுகளில் வெளியாகிறது.

(2) அவர்கள் முறைகளோ சமயத்திற்கேற்றவாறு கொள்ளையடிப்பது. ஏராளமான சாமான்கள் "கேட்டு வாங்கிக்கொள்ளப்படுகின்றன." அதற்கு விலை, ஜெர்மனிக்கு வெளியே ஒரு காசு பெறாத ஜெர்மன் "மார்க்" குகளைக்கொண்டு கொடுப்பது; அவைகளை வைத்து உள்நாட்டிலும் ஒன்றும் வாங்கமுடியாது; ஆகையால் பெல்ஜியன் வியாபாரிகள் முதலானவர்களுக்கு மிஞ்சுவது காலி கிட்டங்கிகள், கடைகள், அவைகளை மறுபடியும் சாமான்கள் வாங்கி நிரப்ப பிரயோஜனமில்லாத "நாணயம்" தான்.

(3) ஆக்கிரமித்த நாடுகளில் ஜெர்மன் துருப்புகள்—இவைகளே அந்த நாடுகளுக்குத் தாங்கமுடியாதபாரம்—அவர்களுக்கு கொடுக்கப்படும் உணவு உள்ளூரார்களுக்குக் கொடுப்பதைக்காட்டிலும் வெகு ஜாஸ்தி—நாணயமும் தங்கள் துருப்புகளுக்கு லாபகரமான விதமாக பெறுமதி ஏற்றப்பட்டது. சுருக்கச்சொல்லில், வெகு சீக்கிரத்தில் ஜாஸ்தியான அழிவு செய்யும் சமாசாரமாக இருக்கிறது.

4. இது கொஞ்சகாலத்திற்குத்தான் என்று ஜெர்மானியருக்குத் தெரிந்திருக்கலாம்; "புது முறை" வந்தால் அச்சமயம் ஆக்கிரமண தேசத்தாரை அடக்கியாள இது ஒரு நல்ல உபாயம்; பண நெருக்கடி இப்போதைக்கில்லாமலும், வாழ்க்கை முறையை கீழ்ப்படுத்துவதால் யுத்தம் முடிந்த பின் அத்தேசத்தாரை சொற்ப சம்பளத்திற்கும் நல்வாழ்விற்கும் ஜெர்மனிக்குச் சென்று வேலை செய்யச் செய்யலாம்.

ஆனால், இவ்வளவு உயர்ந்த நோக்கமெல்லாம், பிரிடனை விரைவில் தோற்கடிக்கலாம் என்ற எண்ணத்தை வைத்து ஏற்பட்டது. எவ்வளவு தாழ்மையான ஆளாயிருந்தாலும் பசிவேதனையால் ஆத்திரங்கொள்ளுவான்; இதை யெல்லாம் 'புது முறை' வந்த பின் நிவர்த்திக்கலாம். அப்படி எதிர்பார்த்த வெற்றியோ கைகூடவில்லை. ஆதலால், ஜெர்மனியிலும் பிரிடனிலும் ஜனங்களுக்குக் கொடுக்கும் உணவில் மூன்றில் ஒரு பாகம் மட்டும் கொடுக்கப்பட்டு வரும் பெல்ஜியர்கள் பிழைப்பது அரிது என்றும், பெல்ஜியத்தில் உணவு பொருள்களே ஒரு மாதத்திற்கு மேல் தாங்காது என்றும் Mr. ஹூவர் பறைசாற்றும் சமயம், ஜெர்மன் பிரசார இலாகா இதற்கெல்லாம் பிரிடன் செய்யும் மறியலே காரணமென்றும், 450,000 டன் உருளைக்கிழங்கும் 1,00,000 டன் சர்க்கரையும் (இவைகள் நல்ல சரக்கா என்று, பசியால் வருந்துபவர் சந்தேகிக்காவிட்டாலும் நாம் சந்தேகிக்கலாம்) நாஸிகள் வெகு தாராளத்துடன் ஆக்கிரமண நாடுகளுக்குத் திருப்பி அனுப்புவதாக, முறையிடுகிறார்கள்.

## உண்மை நடப்பு.

பசியால் எவ்வளவு வருந்தினாலும், இந்த துரதிர்ஷ்ட நாடுகளிலுள்ள ஜனங்களை ஏமாற்றமுடியாது. அவர்கள் கஷ்ட நிலைமையே அவர்களுக்கு

வெறுப்பை ஜாஸ்தி பண்ணிவிட்டது; அவர்களில் வெகு சாமான்ய பேர்வழிக்குக் கூட பின்கண்ட செய்தியெல்லாம் தெரியும்.

(1) ஜெர்மானியர் செய்யும் கஷ்ட நிவாரண வேலையெல்லாம், ஆக்கிரமண நாடுகளில் புரட்சியும் கலகமும் ஏற்படாவண்ணம் அந்த நாடுகளிலிருந்து எடுத்துப் போகப்பட்ட உணவு சாமான்களில் கீழ்தரமான சாமான்களைத் திருப்பி நாஸிகள் அனுப்புகிறார்கள்.

(2) ஆக்கிரமண நாடுகளில் உணவுப் பண்டங்கள் குறைய ஜெர்மன் கொள்ளையே காரணம்.

(3) ஜெர்மானியர் அனுப்பும் உணவுப் பண்டங்கள் வந்து சேராது என்று நிச்சயமானவுடன், ஆக்கிரமண நாடுகளுக்கு வேண்டிய உணவுப் பண்டங்கள் அனுப்ப பிரிடிஷார் ஏற்பாடு செய்து தயாராக வைத்திருக்கிறார்கள்.

(4) பிரிடிஷ் மறியலானது ஜெர்மானியர் பேரில் மட்டுமே. ஆக்கிரமண நாடுகளுக்கு பிரிடன் உணவுப் பண்டங்கள் இப்போது அனுப்பமுடியாது; ஏனென்றால், ஆக்கிரமண நாடுகளிலிருந்து எடுத்துப் போக இடமில்லாததும் அந்த நாடுகளிலிருந்து கொண்டுபோகப்பட்ட தொழிலாளிகளுக்குத் தேவையானதுமான இந்த உணவுப் பண்டங்களை ஜெர்மானியர் எடுத்துப்போய் விடுவார்கள். (இத்துடன் ஒரு விஷயம் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்: உணவுப் பொருள்களில் பல யுத்த தளவாடங்கள் செய்ய உபயோகப்படக்கூடியவை).

## சுடு காற்று.

ஆவியை சுடுகாற்றென்று சொல்லலாமோ என்னமோ; ஆயினும், கர்னல் நாக்ஸ் (Colonel Knox) வாஷிங்டனில் பிரதிநிதி சபையில் கொடுத்த வாக்கு மூலம் பெரும் பரபரப்பை கிளப்பிவிட்டது. "அடுத்து வரப்போகிற" (?) ஜெர்மன் படையெடுப்பில் விஷ ஆவி ஜெர்மானியர் உபயோகப்படுத்துவாரென்று அவர் சொன்னார். இப்படியானால் பிரிடிஷார் இடுப்பு ஒடியுமென்றும் சொன்னார்.

இது சம்பந்தமாக இரண்டொரு விஷயம் கவனிக்கத்தக்கது :—

(a) அமெரிக்கர் பெரும்பாலரும் ஆதரித்தாலும் 'குத்தகை-கடன்' மசோதா ஒரு கட்சியாரின் மசோதா. இந்த மசோதா நிறைவேறிவிட்டால் பிரிட்னுக்கும் (அமெரிக்காவிற்கும்) விளையக்கூடிய ஆபத்துக்களை எடுத்துக் காட்டவேணுமென்பதுதான் அவர் எண்ணம். ஜெர்மானியர் விஷ ஆவி உபயோகிக்கக் கூடுமென்பதே ஒழிய அவர்கள் உபயோகிப்பார்கள் என்ற 'ருஜு' வில்லை.

(b) சென்ற ஜூலை "படையெடுப்பில்" ஜெர்மானியர் (விஷக்காற்று கையில் வைத்துக்கொண்டும்) கொஞ்சமேனும் கருணைகாட்டவில்லை.

(c) எல்லா தேசத்தாரிடத்திலும் விஷ ஆவி இருக்கிறது. விரோதியின் பேரில் உபயோகிக்க தயாராகவிருக்கிறார்கள். யுத்தம் துவக்கினதுமுதலே இது உபயோகிக்க இடமுண்டு என்று தெரியும். அதனால் தான் விஷக்காற்றுப் படாம லிருக்க லக்ஷக்கணக்காக விஷக்காற்று குல்லாய்கள் தயாரிக்கப்பட்டன.

(d) போர் புரிபவர்கள் இதுவரை இக்காற்றை உபயோகப்படுத்தவில்லை யென்பதிலிருந்து போரில் இதனால் பிரயோஜனமில்லையென்பது வெளியாகிறது.

(e) இதை இருதிறப்பாரும் உபயோகிக்கமுடியும்; அதுவே இந்த ஆபாஸ சரக்கை ஜெர்மானியர் உபயோகிக்காததற்குக் காரணம். அபிஸீனியா தேசத்துக் கிராமங்களில் இந்த விஷக்காற்றை இதாலியர்கள் விட்டார்களேயென்றால், திருப்பித் தங்கள் பேரில் விஷக்காற்று பிரயோகிக்கப்படுமென்ற பயமில்லாததால், அவர்கள் தைரியமாக உபயோகித்தார்கள்.

---

# ஐயிக்கப்பட்ட தேசத்தின் குரல்.

---

**நார்வே எப்படி சண்டையை நடத்துகிறது.**
**நேச தேசத்தின் விஷயத்தில் பிரதம மந்திரியின் நம்பிக்கை.**
**கடல் ஜீவனம் செய்யும் தேசத்தாருக்கு சுதந்திரத்தில் விருப்பம்.**
**யுத்தத்திற்குப் பிறகு உலக அமைப்பு.**

---

டி. ஏ. ராமன் எழுதியது.

**நா**ர்வே பிரதம மந்திரி என்னை வரவேற்றார். "நார்வே தேசத்துக்கு ஒரே ஒரு திட்டம்தானுண்டு" என்றார்.

"நார்வேயை அடிமைக்குள் படுத்தின குயிஸ்லிங் என்ற துரோகியையும் அவனுடைய ஆட்களையும் ஒழித்து பராதீனத்திலிருந்து தேசத்தை விடுவிப்பதே".

"இதுவிஷயத்தில் யாதொரு கக்ஷி, கௌரவம் முதலிய பேதமின்றி எல்லா நார்வே தேசத்தார்களும் ஒருமுகமாக இருக்கிறார்கள்."

"எங்களுடைய யாவற்று சொத்து சுகங்களையும் கொடுத்து இங்கிலாந்துக்கு உதவி செய்தாலொழிய சுதந்திரம் பெற முடியாதென்பது நிச்சயம். அதனால், நாங்கள் அவ்வாறு உதவி செய்கிறோம்."

"எங்கள் யுத்த உபயம் என்னவென்றால், 40 லக்ஷம் டன்கள் நிறையுள்ள வியாபாரக் கப்பல்களும், 30,000 மாலுமி ஜனங்களும்."

"பிரிடனில் எங்கள் சைனியங்கள்

பயிற்சிபெற்றுகின்றனர். அவர்கள் பிரிடனைக் காக்க உதவிபுரிகிருர்கள். நார்வேயை விடுவிக்கப்போகும் சுதந்திர சேனையின் முன்னணியாக நிற்கிறது. இச்சேனையில் சேர உலகத்தில் மற்ற பாகங்களிலுள்ள எல்லா நார்வேக்காரர்களும் திரண்டுவருகிருர்கள்.''

''ஐஸ்லாந்தில் எங்கள் ''ஸ்கை'' (சறுக்கும் பாதரக்ஷை) சேனைகள் இருக்கின்றன. கானடாவிலுள்ள எங்கள் சேனையில் நூற்றுக்கணக்கான விமானிகள் இருக்கிருர்கள்.''

''ஸர்க்கார் எங்களுக்காக ஏராளமான விமானங்கள் வாங்கியிருக்கிருர்கள்.''

''இவைகள் ஒரு பெரிய காரியமில்லை என்று நீங்கள் நினைக்கலாம். திடீரென்று யாதொரு முன்னெச்சரிக்கையில்லாமல் காட்டிக்கொடுக்கப்பட்டதும், சுமார் 30 லக்ஷம் ஜனங்களுள்ள ஒரு தேசம் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவு செய்திருக்கிரும்'' என்று வெகு விநயமாகப் பிரதமமந்திரி சொல்லி முடித்தார்.

ஜனங்களுடைய மனேநிலை எப்படியிருக்கிறதென்று அவரைக் கேட்க வேண்டியதவசியமில்லை. ''இன்று நார்வேகாரர்கள் கொண்டிருக்கும் பகை முன் நடந்த மதப்போர்களில் கொண்ட பகைக்கும் மீறியது. நாம் கடைசியில் வெற்றிபெறுவோம் என்ற எண்ணம் அசையாது நிற்கிறது'' என்ருர்.

தேசத்திலுள்ள கேந்திர ஸ்தானங்களை எல்லாவற்றையும் எதிரி கைப்பற்றிக்கொண்டு நார்வேயின் சரித்திரத்திலேயே நடந்திராத அளவுக்கு சேனைகளை உட்கார்த்திவைத்திருப்பதால் எங்கள் போராட்டத்தின் பூரா கதையையும் உங்களுக்கு நான் வெளியிட்டுச் சொல்லமுடியாது. நியாய இலாகாவின் சுதந்திரத்தைக் கெடுக்க நாஸிகள் செய்த பிரயத்தனத்தைக் கண்டித்து நார்வே உயர்தர நியாயஸ்தலத்தில் உள்ள நியாயாதிபதிகள் தங்கள் உத்தியோகத்தை ராஜீநாமாச் செய்தது ஒரு அறிகுறியாகும். நார்வேயின் இளைஞரும் தங்கள் உணர்ச்சிகளை எளிதில் வெளிப்படுத்துகிறவர்கள். ஜெர்மானியர்களுக்கும் அவர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் ஏற்படுகின்றன. அதில் பெரியோர்களும் இளைஞர்களுடன் சேர்ந்திருக்கிருர்கள்.

ஜெர்மனியின் க்ஷேமத்துக்காக நார்வேயை ஆள வீண் பிரயத்தனம் செய்யும் குயிஸ்லிங்கைக் கண்டு அவனைத் தேசம் முழுவதும் வெட்கத்துடன் வெறுக்கிறது.

நார்வேகாரர்கள் பெரும்பாலும் ஜெர்மன் பிரசாரத்தைக் காதுகொடுத்து கேட்பதில்லை. முக்கியமாக லண்டன் ஒலிபரப்பிலிருந்து திரட்டப்பட்ட செய்தியை தங்களுடைய பிரத்தியேகமான வழிகளில் பரவச் செய்கிருர்கள். லண்டனிலிருந்து ஒலிபரப்பப்படும் நார்வே பாஷைச் செய்திகள் பலராலும் கேட்கப்படுகின்றன. பயமுறுத்தலும், சிறைப்படுத்தலும் ஒன்றும் செய்யவில்லை. செய்திகளைக் கேட்பதுண்டு, ஆனல், அதைப் பரப்புகிறதில்லை.

செய்திகளைப் பரப்பி, ஸத்தியாக்ரக திட்டத்தைப் பரவச்செய்யும் ஒரு ''சங்கிலி கடிதத்''தை பிரதம மந்திரி காட்டினர்.

குயிஸ்லிங் என்பவனையும், அவனுடைய ஆட்களையும் நித்திய வாழ்க்கையில் குஷ்ட ரோகிகளைப்போல் வைத்திருக்கிருர்கள்.

"துரோகிகளை ஒழியுங்கள்" "பேன்களை நசுக்குங்கள்" என்று கூவி ஜனங்கள் அவர்களை வரவேற்கிறார்கள். ஒவ்வொரு விதத்திலும் அவர்களுக்கு இடையூறுகள் விளைவிக்கப்படுகின்றன. கடைகளில்கூட அவர்களைத் தள்ளிவைத்திருக்கிறார்கள்.

அவர்கள் கணக்குச் சொல்லும் நாள் வரும். அவர்கள் அடிக்கடி ஞாபகப் படுத்தப்படுகிறார்கள். அவர்களில் பலர் நரம்பு தளர்ந்து போனார்கள். பொதுஜன அபவாதத்தைப் பொறுக்க முடியாத பலர் தானாக நழுவி விட்டார்கள். பாங்கு நோட்டுகளின் பின்புறத்தில் "ராஜன் நீடுழி வாழ்க"வென்றும் "குயிஸ்லிங் ஒழிக" என்று எழுதப்படுகின்றன; நார்வேயின் அரசன் முகம்கொண்ட நாணயங்கள் வெகு உயர்ந்த விலைக்கு விற்கின்றன. அரை ரூபாய் நாணயம் இரண்டு ரூபாய் விலையாகயிருக்கிறது.

ராஜ விசுவாசத்தைக் காட்டக் கூடிய வாசகங்கள் எழுதப்பட்ட ரயில் வண்டிகள் ஓடுகின்றன. தெருச் சண்டைகளும், ஆர்ப்பாட்டங்களும் அடிக்கடி நடக்கின்றன. குயிஸ்லிங்கும், அவனுடைய ஜெர்மானிய அதிகாரிகளும் இதற்காக அடிக்கிறார்கள், சிறைப்படுத்துகிறார்கள். ஜனங்கள் முன்னரைக் காட்டிலும் ஜாஸ்தியாக ராஜவிசுவாசத்தைக் காண்பிக்கிறார்கள்.

மாரிகால இரவுகள் நீண்டதாகவும், குளிராகவுமிருக்கின்றனவென்று பிரதம மந்திரி மெதுவாகச் சொன்னார். "அழைக்காமல் வந்த விருந்தாடிகளுக்கும், தானாக அமர்ந்துகொண்ட கூட்டங்களுக்கும் அளவிலா அபாயங்கள் இருக்கின்றன"வென்றார்.

நேச தேசத்தார் கடைசியில் வெற்றி பெறுவார்கள் என்பதில் ஜனங்களுக்கு பூரண நம்பிக்கையிருக்கிறதாவென்று கேட்டேன்.

ஜெர்மனி விழுந்துவிடும் என்பதில் நம்பிக்கையிருப்பதாகத் தகவல்கள் கிடைக்கிறதென்றார்.

"பிரிடிஷார் பின் வாங்கின உடன் காலத்தில் ஏக்கம் நிறைந்திருந்தது. பிரான்ஸ் விழுந்தது தங்கள்பேரில் அடிவிழும்; அதைத் தடுக்கமுடியாதென்று நார்வேக்காரர்கள் தெரிந்து கொண்டார்கள். லிபியாவில் பிரிடிஷாருக்கு ஏற்பட்ட வெற்றிகளும், கிரேக்க வெற்றிகளும், வெகுவாகப் பகிரங்கப்படுத்தப்பட்ட ஜெர்மன் படையெடுப்பு வீணாகப்போனதும், அளவுக்குமேல் தைரியத்தைப் புகட்டியிருக்கிறது.

நார்வேயின் சுதந்திர யுத்தம் மற்ற தேசங்களிலும், மற்ற கடல்களிலும் நடக்கிறதென்றும், ஜெர்மனியில் விழும் ஒவ்வொரு வெடியும் நார்வேயின் சுதந்திரத்திற்காகவென்றும் அந்த தேசத்தார் அறிகிறார்கள்.

ஜெர்மனியின் புதிய ஏற்பாட்டைப் பற்றிக் கேட்கப்பட்டபோது "அதைப் பற்றி ஜெர்மானிய கிரந்தங்கள் படிக்க வேண்டியதில்லை. அதன் அனுஷ்டானத்தையே நாங்கள் பார்க்கிறோம்" என்று பிரதம மந்திரி சொன்னார்.

நாஸியின் கொள்கைப்படி புதிய ஐரோப்பாவென்றால் என்னவென்று நார்வேக்காரர் வெகு நன்றாக அறிவார்கள். சுற்றிலும் சிற்றரசுகள் சூழ நடுவில் ஒரு பெரிய சிலந்திபோல் ஜெர்மனி உட்காந்துகொண்டு எல்லாவற்றையும் கொள்ளையிட்டுக்கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

தினந்தோறும் நடக்கும் கொள்ளைகளில் சிலவற்றைச் சொல்லலாமென்றால், ஊரில் இருக்கும் மாமிசம், வெண்ணெய், முட்டைகள் இவைகளில் பெரும்பாகம் ஜெர்மானியால் கைப்பற்றிக்கொள்ளப்படுகிறது. நார்வேயில் வியாபித்திருக்கும் ஜெர்மானிய சைனியத்திற்காக அந்தத் தேசத்திலுள்ள பாங்கிகளிலிருந்து நூறுகோடி நார்வே நாணயங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

வல்லரசுகளின் போராட்டம் உலகத்தின் இம்மூலைக்கு வராது என்ற பிரமையின் பேரில் சென்ற 126 வருஷ காலமாக அதிக அமைதியுள்ள தேசமாகயிருந்து வந்தது.

அதன் முயற்சிகளும் அமைதிக்கலைகளிலேயே செலுத்தப்பட்டமையால், பண்பும், ஸமூக முன்னேற்றமும் அதிகமான அளவிற்கு அடைந்திருந்தது. மனோநிலையிலும், உடல் பலத்திலும் இப்படிப்பட்ட அடியைத் தாங்கக் கூடியதாகயில்லை. ஆனால், நார்வேயின் சுதந்திர சக்தி இவ்வளவு கால அமைதி வாழ்க்கையில் குறையவில்லை. அதை ஜெர்மானியர் நன்றாக அறிகிறார்கள்.

யுத்தத்திற்குப் பிறகு நடக்கப்போகும் உலக நிர்மாணத்தைப்பற்றி நான் கேட்ட கேள்விகளுக்கு நார்வேயின் பிரதம மந்திரி பதில் அளிக்கையில், நார்வேயின் வாழ்க்கையும் மேல் பக்கத்து வல்லரசுகளின் வாழ்க்கையோடு இணைக்கப்பட்டிருக்கிறதென்பதைக் காட்டினார். கடல் வாழ்க்கை கொண்ட எந்த ஜாதியாரும் கடற்கரையில்லா தேசங்களுடன் சேர்ந்தால் செல்வமழிந்து போய்விடும்.

"நம்மைப்போல சுதந்திரமும், ஜனநாயகமும் கொண்ட தேசங்களுடன் நாங்கள் இதுவரை இணைக்கப்பட்டுள்ளோம்-உலகத்திலேயே சுதந்தர ஜனங்களின் மிகப்பெரிதான சங்கமானது பிரிட்டனும், பிரிடிஷ் ஸாம்ராஜ்யமும்.

"இங்கு லண்டனில், நாங்கள் வெற்றி பெற பிரயத்தனம் செய்வதோடு எல்லா சுதந்திர ஜாதியார்களும் அரசியலில் ஒத்துழைத்து உலகம் முழுதும் சிற்றரசுகளுக்கும், வல்லரசுகளுக்கும் ஒன்றாக செல்வச்சீரும், அரசியல் ஸாவதானமும் உண்டாகும்படி செய்வதற்கான அஸ்திவாரக்கல் போட்டுக் கொண்டிருக்கிறோம்."

---

**பிரிடிஷ் தொழிலாளிகள் அனைவரும் யுத்த காரியங்களுக்கு அமர்த்தப்படுவார்கள்.**

**போர்முனைக்குப்போகும் தொழிலாளிகளுக்குப் பதிலாக மற்றவர்கள் நியமிக்கப்படுவார்கள்.**

**அவசியமில்லாத தொழில்களிலிருந்து அவசியமான தொழில்களுக்கு தொழிலாளிகள் மாற்றப்படுவார்கள்.**

**வயதுக்கிரமப்படி புது ஆட்கள் தொழிலுக்குச் சேர்க்கப்படும்.**

பிரிட்டனிலுள்ள தொழிலாளிகள் அனைவர்களையும் யுத்த காரியங்களுக்கு அமர்த்திக்கொள்ள பிரிடிஷ் கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் உத்தரவுகள் பிறப்புவிக்கப் போகிறார்கள். பிரிட்டனுடைய பொருளாதாரமே யுத்தத்துக்காக மாற்றி

அமைக்கப்படப்போகிறது. இதற்காக தொழில்-இலாகா மந்திரி காமன்ஸ் ஸபையில் ஒரு திட்டத்தை சென்ற வாரம் சமர்ப்பித்து, தொழிலாளிகளோடும் முதலாளிகளோடும் சர்ச்சை செய்து யோசனைகளைத் தெளிவு படுத்திவிட்டார்.

சைனியத்துக்கு வேண்டிய சிப்பாய்களையும், தொழில்களுக்கு வேண்டிய வேலைக்காரர்களையும் ஒன்றுக்கொன்று முரண்படாமல், தொழிலுக்குச் சேர்ப்பதால் சைனியம் பலம் குறையாமலும், அதே மாதிரி, சைனியத்தால் தொழில் குறையாமலுமிருக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

இதற்காக அநேக தொழிலாளர்களை அவசியமில்லாத தொழில்களிலிருந்து அவசியமான தொழில்களுக்கு மாற்றப்படுவதோடு அநேக ஸ்திரீகளையும் தொழில்களுக்குச் சேர்க்கப்படும்.

ஏற்கனவே 30,00,000 பேர்கள் சைனியத்தில் சேர்க்கப்பட்டு விட்டார்கள். 19-வயதிலிருந்து 41-வயதுவரை உள்ள ஆட்களைச் சேர்த்து சைனியம் மேலும் 15,00,000 ஆட்கள்வரை அதிகப்படுத்தப்படும். தவிர, தொழிலுக்கவசியமானவர்களென்று நிறுத்தி வைக்கப்பட்ட அநேகம் பேர்களை இப்பொழுது சைனியத்தில் சேர்த்து அவர்களுடைய ஸ்தானத்தில் புது ஆட்களை தொழில்களுக்குத் தயாரிக்கப்படும்.

## தொழில்களைத் தரம் வகுத்தல்.

இக்காரியங்களுக்காக தொழில்களை அவசியமானதென்றும், அவசியமில்லாததென்றும் இருவகைப்படுத்தி, யுத்த-தொழில்களையும், விவசாயத்தையும், ஏற்றுமதி வியாபாரத்தையும் தேசத்துக்கு அவசியமென்ற வகுப்பிலடக்கி, இவைகளெல்லாம் சர்க்கார் நேர் பராமரிஷையில் நடத்தப்படும். இந்தத் தொழில்களிலிருந்து தொழிலாளிகள் மாறுவதென்றால் சர்க்கார் அனுமதிக்க வேண்டும். இதற்குக்கூலி, வேலை செய்யும் நேரம் முதலியன சர்க்காரால் நிச்சயிக்கப்படும்.

அவசியமில்லாத தொழில்களில் சுமார் 80,00,000-லிருந்து 100,00,000 பேர்கள் வேலை செய்வதாகத் தெரிகிறது. இவர்களில் 25,00,000-லிருந்து 30,00,000-வரை சைனியத்துக்கும், அவசியமான தொழில்களுக்கும் வேண்டும்போது மாற்றிக்கொள்ளலாம்.

மேலும், வீட்டு வேலைகளில் அமர்ந்திருப்பவர்களும், வேலையிலமராது 7,00,000 பேர்களும் கைவசமிருக்கிறார்கள். ஆனால் முழுவதும் வேலையில்லாது இருப்பவர்கள் இப்பொழுது பிரிடனில் கிடையாதென்றே சொல்லவேண்டும். மேற்சொன்ன 7,00,000 பேர்களும், அகன்னியகனி காலக்ஷேபம் செய்வார்கள். ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கு மாறும்போது சில தினங்களுக்கு மாத்திரம் வேலையில்லாது சர்க்கார் உதவியை இவர்கள் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இவர்களை அவசியமில்லாத தொழில்களுக்குச் சேர்த்துக்கொள்ளலாம்.

## லக்ஷக்கணக்கான ஸ்திரீகள் தொழிலாளிகளாக அமர்ந்திருக்கிறார்கள்.

இதுவரையில் வீட்டில் வேலைசெய்து வந்த ஸ்திரீகள் தொழிற்சாலைகளிலும், ஆபீஸுகளிலும் அமர்ந்ததின் முடிவாக, தொழிலாளிகள் சங்கியை 2,30,00,000 அல்லது 2,35,00,000-லிருந்து இப்பொழுது 2,60,00,000-ய் பெருகி விட்டது.

மொத்தத்தில் சைனியத்துக்கும், தொழில்களுக்கும் 1,10,00,000-லிருந்து 1,20,00,000 வரை ஆட்கள்வேண்டும். வேண்டிய வீதத்துக்கு, அவசியமில்லாத தொழில்களிலிருந்து மாற்றிக்கொள்ளவும், இதுவரையில் வேலையில் அமராதவர்களைக் கட்டாயப்படுத்தி அமரச்சொல்லவும், ஜனங்கள் வயதுப்படி 8 வகுப்புகளாகப் பிரிக்கப்படுவார்கள்.

## சர்க்கார் வரும்படி (பண வரவு) திருப்திகரமாயிருக்கிறது.

கைத்தொழில்களால் சாமான்களின் உற்பத்தி அதிகப்படப்பட சர்க்காருக்கு வரிகள் மூல்யமாக வரும்படியும் அதிகப்படும். வரிகள் வசூலாவது ஜனவரி மாதத்தில் எப்பொழுதும் அதிகமென்றாலும், இந்த வருஷம் ஜனவரி முதல் இரண்டு வாரங்களுக்குள்ளாக 14,70,00,000 பவுன் வசூலாயிருப்பது அபூர்வம் தான். சென்ற வருஷம் முழுவதும் வசூலாயிருக்கும் 72,00,00,000 லக்ஷ பவுனுக்கு இது 5-ல் ஒரு பாகமாகும். ஆகவே சர்க்கார் பாங்கிகளிடமிருந்து அதிகக்கடன் வாங்கவில்லை.

மேலும் இந்த ஜனவரி முதல் மூன்று வாரங்களுக்குள் 1946–48 யுத்த பாண்டு ($2\frac{1}{2}\%$), ஸேவிங்ஸ் பாண்டு (3%) களிலிருந்து 53,90,00,000 பவுனும், சென்ற மாதத்தில் சிறு ஸேவிங்கிஸிலிருந்து (3-வது வாரத்தில் மட்டும் 1,00,00,000 பவுன் உள்பட) முதல் மூன்று வாரங்களில் 2,92,00,000 பவுனும் சேர்ந்திருக்கின்றன. சென்ற வருஷத்தில், இதே மூன்று வாரங்களில் 1,77,00,000 பவுன் கூட இந்த மூன்று வாரங்களில் சிறு சேவிங்ஸிலிருந்து சேரவில்லை.

---

## ஹிட்லர் பிரசங்கத்திற்கு அமெரிக்காவின் தக்க பிரதிகாரம்
## ஜேம்ஸ் N. ஜிரார்டு அமெரிக்கர்களை போர் துவக்க விரும்புகிறார்.
## தனிப்பட்ட வியாபகர்களின் அபிப்பிராயம்.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் பிரிடனுக்கு மேன்மேலும் ஒத்தாசை செய்வதாக லார்ட் ஹலிபாக்ஸுக்குக் கொடுத்த புனர் வாக்குத்தத்தத்துடன் பூர்த்திக்காகச் சேர்க்கப்பட்ட கீழ்க்கண்ட வியாக்யானம் ஹிட்லர் பிரசங்கத்திற்கு அமெரிக்கர்களின் பிரதிகாரத்தைக் காட்டுகிறது.

கலோனல் பிராங்க் நாக்ஸ் அமெரிக்க கடற்படை காரியதரிசி சொல்லுவதாவது "ஹிட்லரின் ஆதிக்கத்தில் உயிர் வாழ்வதைக் காட்டிலும், நான் அவனோடு எதிர்த்துச் சண்டையிட்டு மடிவதில் சம்மதமுடையவனாகயிருக்கிறேன். பிரிடன் சண்டையில் மும்மரமாக இருக்கிறது. நாம் இப்பொழுது விலகவோ, கலகம் செய்யவோ, வியாபாரம் செய்யவோ காலமில்லை. நம்மைக் குற்றங்கூறும்படி நாம் அவ்வளவு தயவு காட்டக்கூடும். நாம் பிரிடனுக்கு எல்கையில்லா ஒத்தாசை அளிக்காவிட்டால் நாம் எல்லோரும் சேர்ந்து தோல்வி அடைவோம்" (சிகாகோவில் நடந்த ஒரு பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது).

யுனேடேட் ஸ்டேட்ஸ் கீழ்காரியதரிசி மிஸ்டர் ஸம்னர் வெல்ஸ் சொல்லுவதாவது "அச்சு" நாடுகளால் கொண்டாடப்படும் இந்த 'புதிய ஒழுங்கு முறைமை' "நாகரீக வாழ்விலிருந்து பண்டயகால அநாகரீக, முறட்டுத்தனமான வாழ்விற்குத் திரும்புவதுதான். அச்சு-நாடுகளின் வெற்றி அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் ஸ்வாதீனத்தை நேசர்களிடமிருந்து உலகையே ஆக்கிரமிக்கும் ஆசையுடைய அதிகாரிகளிடம் சேர்க்கும். மத்தியஸ்தம் செய்யப்பட்ட ஒரு சமாதான உடன்படிக்கைக்குஅது எழுதப்பட்ட காகிதத்தின் மதிப்புக்கூடயிருாது" (நியூயார்க்கில் செய்த பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது).

வாஷிங்டனில் ஸினெடர் கார்டர் கிளாஸ் சொல்லுவதாவது " நாம் முதலில் கப்பல்களை உடைக்க ஆரம்பம் செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். ஹிட்லரிடம் சற்றுகிலும் எனக்குப் பீதி கிடையாது. நான் ஒரு பயங்காளியாகயிருப்பதைவிட சாவது மேல். ராஜ்ஜியங்களின் பரஸ்பர விவகார சட்டத்தின் கீழ் நான் நமது கப்பல்களை எங்கு வேண்டுமானாலும் தக்க துணைக்கப்பல்களோடு அனுப்புவதை ஆமோதிக்கிறேன். இவைகளைத் தடை செய்பவர்களைச் சுட்டு எமலோகத்திற்கு அனுப்புவதையும் ஆமோதிக்கிறேன்.

தனிப்பட்டவர்களின் சபை அதிகாரி ஜிரால்ட்டு நை கூட சொல்லுகிறார். "இது தான் அந்தவகையாரிடமிருந்து நீ நியாயமாய் எதிர்பார்க்கலாம்".

சென்ற யுத்தத்தில் ஜெர்மனியிலிருந்த அமெரிக்கன் மந்திரி ஜேம்ஸ் W. ஜிரார்ட்டு அதிகார சபை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்ததாவது "இப்பொழுது போர்துவக்குவது அவசியமில்லையென்று அவருக்குத் தோன்றினாலும், உடனே ஜெர்மனியோடு போர் துவக்கவேண்டுமென்றே சொன்னார். அவர் ஜெர்மானியர்கள் ஐரோப்பாவை ஜயித்து விட்டால் முதலில் அமெரிக்காவைத்தான் தாக்குவார்கள் என்று வாதித்தார்".

இவர் தனக்கும், கெய்ஸர் காலத்தில் உயர்ந்த பதவியிலிருந்த அட்மிரல் வான் டிர்பிட்ஸுக்கும் நடந்த ஒரு சம்பாஷணையை ஞாபகப்படுத்திக் கொண்டு மேற்சொன்ன வான் டிர்பிட்ஸு சொன்னதாக பின் வருமாறு செல்லுகிறார். அதாவது "நாம் அமெரிக்காவுக்குப் போய் அந்த கொழுத்த பணக்கார, சீர்கெட்டு வரும் தேசத்தினிடமிருந்து நம் சண்டைச் செலவுகளை வசூலித்து வரலாம்" என்பதே.

மிஸ்டர் ஜிரார்ட்டு, தனிப்பட்ட வியாபகர் ஹிராம் ஜான்ஸனிடம் தான் அவர் காலடியில் சாகத்தயாரென்றும், ஆனால் அடைக்கலம் புகவோ, சமாதானத்திற்கோ தான் ஒப்பவில்லையென்றும் சொன்னார்.

அவர் ஜான்ஸனிடம் சொன்னதாவது "ஒருவனுடைய அதிகாரத்தின் கீழ் வாழ்வதைவிட இந்த தேசத்தில் மரணத்தை நான் அடையச் சித்தமாயிருக்கிறேன். ஜெர்மானியர்கள் நம்மை நஞ்சுபோல் வெருக்கிறார்கள்".

மிஸ்டர் ஜிரார்ட் முடித்ததாவது "ஜெர்மனியிலோ, அல்லது இத்தாலியிலோ ஒரு கிளர்ச்சி எதிர்பார்ப்பது நாம் விரும்பத்தக்கதே. ஜெர்மனியையும் பட்டினி போடமுடியாது."

ஹிட்லர் பிரசங்கத்தைப் பற்றி நியூயார்க் போஸ்ட் பத்திரிகை அறிவிப்பதாவது, "இது அமெரிக்காவுக்கு ஒரு புதிய பயமுறுத்துதலல்ல. ஆனால் இதன் வாசகத்திலிருந்து அமெரிக்கா ஜனங்கள் இதைக்கேட்டு பயப்படுவார்களென்று ஹிட்லர் அபிப்பிராயப்படுவதாகவும், இங்கே ஒரு சண்டைக்குக் காரணம் உண்டு பண்ணியதாக ஹிட்லர் நினைப்பதாகவும் நன்கு வெளியாகிறது.

---

# நாஸிகளின் யுத்த நோக்கங்கள்.

நாஸிகளின் நோக்கங்களெல்லாம் ஏற்கனவே தெரிந்ததுதான். ஆனால், ஏதாவது சந்தேகமிருக்குமோவென்று ஒரு ஜெர்மானியரே, அதாவது டாரே என்ற பெயர் கொண்ட ஜெர்மன் விவசாய மந்திரியே அவைகள் என்னவென்று சென்ற மே மாதத்தில் உயர்தர நாஸி உத்தியோகஸ்தர்கள் முன்னிலையில் பேசும்போது, துலக்கிவிட்டார். 'நமது நோக்கம் உலகத்தை கி. பி. 5—15 நூற்றாண்டுகளிலிருந்த மாதிரி, அடிமைப்படுத்துவதுதான். இம்மாதிரியாக, திருஷ்டாந்தத்துக்காகவோ, அல்லது அலங்காரப் பேச்சுக்காகவோ சொல்லவில்லை. இதுதான் உண்மை. நாம் எடுத்துக் கொண்டிருக்கும் மகத்தான காரியத்துக்கு இது பிறரை அவசியமாய் அடிமைப்படுத்தவேண்டும், ஜெர்மானியருக்குப் போதுமான வாசஸ்தலத்தை அடைய ருஷ்யாவை நீக்கி ஐரோப்பா, ஆபிரிக்காவாகிய இரண்டு கண்டங்களும் வேண்டும். இந்தத் தேசங்களை 1940 சரத்ருதுவுக்குள் பிடித்துக்கொண்டு ஜெர்மானியரல்லாதவர்களுக்கு இப்பொழுது சொந்தமாயிருக்கும் நிலையங்களையும், தொழில் செய்ய வைத்திருக்கும் ஆஸ்தியையும் வீரத்தனமாய்ப் போர் புரிந்த ஜெர்மன் சிப்பாய்களுக்கும், நாஸிக் கக்ஷியிலிருக்கும் தகுந்த அங்கத்தினர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிடுவோம். இவர்களே இனி ஏற்படப்போகும் புது-உலக அமைப்பில் புதுப் பிரபுக்களாவார்கள். ஜெர்மானியரல்லாத மற்ற ஜாதியார்களெல்லோரும் நிலமில்லாது, அடிமைகளாக,

ஆய்விடுவார்கள்' என்று டாரே சொல்லிவிட்டார். அதிகாரம் என்ற கள்ளைக் குடித்து, வெறிபிடித்து இவர் சொன்ன மற்ற வார்த்தைகளையும் இங்கு எடுத்துக் காட்டவேண்டியது அனாவசியம். டாரே என்பவர் ஒரே வார்த்தையில் தன் எண்ணத்தை அடக்கிவிட்டார். ஜெர்மனியின் நோக்கம் பிறரை அடிமையாக்கு வதுதான். டாரே பேசிய முழுப்பிரசங்கமும் யாவரும் அறிந்த 'லைப்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் வெளிவந்துவிட்டது.

அடிமையாக்குவதே ஜெர்மன் நோக்கமென்பது வெளிப்பட்டதிலிருந்து ஜெர்மனி சொல்லிக்கொண்டிருக்கும் புது-உலக-அமைப்பு என்னவென்று தெரிந்துவிட்டது. இந்த உலக-அமைப்பைப்பற்றி ஸ்தோத்திரம் செய்து தம்பட்டமடித்து வரும் ஜெர்மன் பிரசாரகரான டாக்டர் கோயபல்ஸுக்கு இது ஒரு வேதனையாய்விட்டது. டாரே எழுதியது என்னவென்று தெரியாத இந்தியர் களுக்கு அதைக் கண்டித்து பலமாய் ஜெர்மனி ஒலிபரப்பியது.

அது எவ்விதம் இருந்தபோதிலும் சரி, ஜெர்மனி உத்தேசித்திருக்கும் அடிமைத்தனத்தைத் தடுப்பதற்காகத்தான் பிரிடன் இந்த யுத்தத்தில் இறங்கி இருக்கிறது. அமெரிக்காவும் அதற்காகத்தான் ஆதரவை பிரிடனுக்குக் கொடுக் கிறது. இதில் நாமடையப்போகும் வெற்றியிலிருந்துதான் உலகத்துக்கே அமைதி ஏற்படப்போகிறது. இந்த உலக நன்மையை நாடி இப்பொழுதே பிரிடனுடைய ஜன சமூகத்தில் தலைகீழான மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக் கின்றன. இதைப் பார்த்து ஜெர்மனி நடுங்குகிறது. இதற்காகவே சமீபத்தில், பிரிடனில் பொது ஜன சௌகரியம் குறைவாகயிருப்பதாகத் தூஷித்து, ஆனால் ஜெர்மனி ஸ்வர்க்கலோகமென்று பேசினார். சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளையைப்போல் ஜெர்மன் ரேடியோ இதையே பின்பற்றிப் பின்வருமாறு தடபுடலாய்ச் சொல்லி உலகத்தாரின் அபிப்பிராயத்தை மாற்றப் பார்க்கிறது.

ஜனவரி மாதம் 28-ம் தேதியன்று யுத்தம் சற்று அப்போது அசந்திருப்பதைப் பற்றிப் பேசும்போது, இனி யேற்படப்போகும் புதிய சகாப்தத்தில் அடிமை நாடுகள் ஒழிந்து, சர்வ ஜனங்களும் ஸ்வதந்திரம் அடைந்து, அவரவர்களுடைய ஸ்வபாவத்திற்கும், ஐதீகத்திற்கும் தக்கபடி தங்கள் காரியங்களைச் செய்துகொள்ளு வார்களென்று மிஸ்டர் ஹாரல்ட் நிக்கல்ஸன் எடுத்துக் காட்டினார். இதைப் பற்றி யாரோ நடுநிலைமை வகித்தவன், ஒருவன் வருத்தப்பட்டு, பதில் சொல்லு வதாக, 'மிஸ்டர் ஹாரல்ட் நிக்கல்ஸன் சொல்லுவதெல்லாம் பிரிடிஷ் மந்திரி களும், டைம்ஸ் பத்திரிகைக்குத் தலைச் சொற் பொழிவுகள் எழுதுபவர்களும் கலந்து சொல்வதுதான். ஐரோப்பா முழுவதையும் ஸ்வாதீனப் படுத்திக் கொள்வதுதான் பிரிடனுடைய நோக்கம். பிரிடனுக்கு சார்பான ஸ்வீடிஷ் பத்திரிகைகளும், ராஜ்ய தந்திரிகளும்கூட இதை வெறுக்கிறார்கள்' என்று ஜெர்மன் ரேடியோ வழக்கம்போல் தூர்க்கக்ஷியாடுகிறது.

இம்மாதிரியான பொய்யும், பேத்தலும் நாஸிகளுக்கெடுத்தது. நாம் அதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும். ஆனால் டாரே சொல்லியபடி அடிமைகள் இனி

யேற்பட்டால், அவர்கள் இதையெல்லாம் படித்துத் தெரிந்துகொள்ளமாட்டார்கள். ஏனென்ருல், அந்த அடிமைகளுக்குப் படிப்புக் கிடையாதாம். அவர்களை எழுத்தறியாத மூடர்களாய் வைத்துவிடுவார்களாம். உயர்தரப் படிப்பெல்லாம் ஜெர்மானியருக்கு மட்டும்தான்.

---

## ஜெர்மனியின் தொழிலாளிகளின் பிரச்னே.
## ஜெர்மனியில் அன்னிய நாட்டு வேலைக்காரர்கள்.
## கட்டாயப்படுத்தி ஆள் சேமிப்பதும் வற்புறுத்துவதும்.
## தேசிய பொதுவுடமைக்கொள்கையில் மூலதனத்தின் அபிவிருத்தியும்.

ஸண்டே டைம்ஸ் பத்திரிகையில் ஒரு விசேஷ நிருபர் எழுதுகிருர்.

ஜெர்மனியில் தொழிலாளர் பிரச்னை அதிகரித்துவிட்டதென்பதற்குச் சின்னங்கள் இருக்கின்றன. டிஸம்பர் மாதக் கடைசியில் வேலையில்லாதவர்களின் சங்கியை 63,000-த்திலிருந்து 32,000-க்குக் குறைந்துவிட்டது. அவர்களில் நூற்றுக்குப் பத்துப்பேர்கள்தான் வேலைக்குக் கிடைக்கக்கூடியவர்கள். ஆக்ரமிப்பு நாடுகளிலிருந்து கட்டாயத்தின்பேரில் ஜெர்மனிக்குக் கொண்டுவரப்பட்ட தொழிலாளிகளும் வேலை செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படும் யுத்தக் கைதிகளும் வேலைகளுக்குத் தேவையான சங்கியைப் பூர்த்தி செய்யக்கூடவில்லை.

அன்னிய நாட்டு வேலைக்காரர்களின் சங்கியையை மதிக்கப்போதுமான கணக்குகள் இல்லை. ஆனுலும் ட்யூச்சே வேர் வாலடங் என்ற பத்திரிகையில் ஒரு வியாசத்தில் மேற்படி சங்கியை யுத்த ஆரம்பத்தில் 5,00,000 என்றும் 1940-ம் வருஷம் முடிவில் 11,00,000-க்கு அதிகரித்துவிட்டதென்றும் சொல்லி இருக்கிறது. இந்தக் கணக்கு மாதா மாதம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அப்படி வந்தவர்களில் பெரும்பான்மையோர் போலந்திலிருந்தவர்கள். கடைசியாக வந்திருக்கும் கணக்குகளிலிருந்து தெரிய வருவது யாதெனில் :—

சுமார் 5,00,000 போலந்து ஜனங்கள் ஜெர்மனியில் வேலை செய்துகொண்டு இருக்கிருர்கள். அடுத்தபடியாக 1,10,000-க்கு அதிகமான ஸெக் ஜனங்கள். அதன் பிறகு ஆல்ஸாஸிலிருந்து 1,00,000 பிரெஞ்சுக்காரர்கள். பெல்ஜியமும் நெதர்லாந்தும் தலைக்கு 1,00,000 வேலைக்காரர்களை அனுப்பியிருக்கிறது. மேலும் யுத்தத்தில் பிடிபட்ட 10,00,000 கைதிகளும் வேலை செய்து வருகிருர்கள்.

ஜெர்மன் பொருளாதார நிலைமையில் அன்னிய நாட்டுத் தொழிலாளிகளின் ஸ்தாபனம் நிரந்தரமான ஏற்பாடாகக் கருதப்படவேண்டும். ஷ்வார்ட்ஸி கோர் என்ற பத்திரிகையில், யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனி, அன்னிய நாட்டுத் தொழிலாளிகளை இன்னும் அதிகமாக உபயோகப்படுத்துமென்றும், எழுதியிருக்கிறது. பொறுப்புள்ளதும், கடினமானதும், ஆனுல் அதிகச் சம்பளமுள்ளதும்,

யந்திர சம்பந்தமானதும், புத்திசாலித்தனமாய் செய்யக்கூடியதுமான வேலைகளில் ஜெர்மானியத் தொழிலாளிகளுக்கு விசேஷ கௌரவம் அளிக்கப்படும் என்பது நிச்சயம். சாதாரணமான வேலைகளுக்கு அன்னிய நாட்டுத்தொழிலாளிகளை உபயோகப்படுத்தட்டும். போலந்து ஜனங்களை புத்திசாலித்தனமான வேலையையும் ஜெர்மானியர்களை செங்கல்களை வண்டிகளில் ஏற்றிச்செல்லவும் கற்களை உடைக்கவும் செய்யும்படி சொல்வது தவறானது.

இதே அபிப்பிராயத்தை ஜெர்மனியின் பொருளாதார மந்திரி சபையில் ஒரு பெரிய உத்தியோகம் வகிக்கும் ஹார் கெர்ல் என்பவர் அவர் ப்ரன்ஸ்விக் தேசத்தில் செய்த பிரசங்கத்தில் வெளியிட்டிருக்கிறார் (இது மஞ்சீனர் ந்யூஸ்டி நாக்ரிக்டன் பத்திரிகையிலிருந்து எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது). "ஜெர்மனியின் முக்கியமான ஸ்தாபனங்களில் ஜெர்மானியத் தொழிலாளிகளை உயர்தரமான வேலைகளுக்குத்தான் உபயோகப்படுத்தப்படும். அதாவது, அதிகமான கூலியைப் பெற்று அவர்கள் மேன்மையாக வாழ்நாளை கழிப்பார்களென்று அர்த்தம்."

ஆனாலும் ஜெர்மானிய வேலைக்காரர்கள் மிகவும் கஷ்டமான நிலைமையுடன் வேலை செய்து வருகிறார்கள். வேலையின் சௌகரியத்தைப்பற்றியாவது அல்லது சம்பளத்தைப்பற்றியாவது சிறிதும் அதிருப்தியிருப்பதாக எந்த வேலைக்காரர்களும் அறிவித்தால் அவர்களைக் கட்டாயப்படுத்தி வேலை செய்யச்சொல்லுவார்கள்.

ஏற்கனவே இருந்ததைவிட மிகவும் அதிகமாக பெண்பிள்ளைகளை கூலி வேலைக்கு அமர்த்துகிறார்கள். பெண் பிள்ளைகள் தங்கள் வீட்டு வேலைகளை கவனிக்கவேண்டியவர்கள் என்ற அபிப்பிராயம் ஜெர்மனியில் குறைந்துவிட்டது. பெரிய குடித்தனத்திலிருக்கும் ஸ்திரீகளும் கூட வேலை செய்ய அனுப்பப்படுகிறார்கள். வீட்டு அலுவல்களோடு இதையும் செய்யக்கூடிய ஸ்திரீ ஜனங்களுக்கு அறை நாள் வேலையும் பிறகு ஓய்வும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அந்நிய நாட்டுப் பத்திரிகைகளில் செய்த விளம்பரங்களிலிருந்து ஜெர்மானிய தேசீய பொதுவுடமை கக்ஷிக்காரர்கள், அவர்கள் அருவருப்புடன் நோக்குவதாகத் தோன்றும் முதலாளிகளின் ஆதிபத்யத்திலிருந்து ஒரு விஷயமும் அறிந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. ஸ்வீடனில் வெளியாகும் நியு டாக்லேட் அல்ல ஹேண்டா பத்திரிகை அறிவிப்பது என்னவென்றால், நார்வேயின் அலுமினிய உற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்ய நார்டிஸ்கா அலுமினியம் என்ற பெயருடன் ஒரு புதிய கம்பெனி பெர்லின் நகரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு 2,00,00,000 மார்க்குகள் மூலதனம். அதன் ஸ்தாபகர்கள் பெரும்பாலும் விமான உற்பத்தித் தொழிலில் ஊக்கமுள்ளவர்களென்று சொல்லப்படுகிறது.

இதே சமயத்தில் ஜெர்மனியிலும் பிரான்ஸிலும் உள்ள உலோகங்களில் வேலை செய்யும் தொழிற் சாலைகளை ஒருங்கு சேர்ப்பதைப்பற்றி சர்ச்சை நடந்து வருவதாக விஷியிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. பிரெஞ்சு தொழிற் சாலைகளில் இந்தக் கூட்டுறவிலிருந்து ஜெர்மனியின் யுத்த சம்பந்தமான முயற்சிகள்

அதிகமாக ஆரம்பிக்கப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்குக் காரணம்: ஜெர்மனியில் தேவையான வேலைக்காரர்களில்லாத கஷ்டம்: பிரெஞ்சு தொழிற் சாலைகள் வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்திக்க இதுவரையில் சக்தியற்று இருப்பது. பிரெஞ்சு தொழிலாளிகளுக்குப் பதிலாக வேலை செய்யப்படாத சாமான்களைக் கொடுப்பதற்கு ஜெர்மனி சம்மதிக்கிறதென்று தெரிகிறது. புதிதான சாமான்களையும் தொழிலாளிகளையும் ஜெர்மனி கைவசப்படுத்தி விட்டதிலிருந்து பிரெஞ்சு தொழிற்சாலைகள் மிகவும் கேவலமான நிலைமையை அடைந்து விடுமென்று தெளிவாய்க் காணப்படுகிறது. தொழிற்சாலைகளை வசப் படுத்திக்கொள்வதற்கு ஜெர்மானியர் செய்யும் உபாயம் என்னவென்றால்:— ஆக்கிரமண நாடுகளிலுள்ள லேவாதேவிக் கடைகளைத் தாங்கள் மேற்படி தொழிற் சாலைகளுக்குக் கொடுத்திருக்கும் கடன் தொகைகளைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கும்படி செய்வது. இவ்வளவு சிறிய அறிக்கையில் தொழிற்சாலைகள் பணங்களைத் திருப்பிக் கொடுக்க இயலாது. அந்த சமயம் அதே மாதிரி சிக்கல்கள் ஏற்படாதபடி தடுக்க மேலும் பொருள் தேவையாயிருக்குமென்று அவர்களுக்கு ஆலோசனை கூறுவது: பிறகு ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு முதலாளியை பங்குதாராகச் சேர்த்துத் தேவையான பொருளுதவி செய்து தொழிற்சாலையை ஜெர்மானியர் ஆதீனத்துக்குட்படுத்துவது.

ஜெர்மானியரின் விசாலமான பொருளாதார ஸ்தாபனங்களின் முக்கியமான அம்சமென்னவென்றால் ஐரோப்பா முழுவதும் தொழில்களையும் மூலதனத்தையும் கைப்பற்றிக் கொள்ளுவதுதான். உள்நாட்டு வியவகாரங்களில் தேர்ச்சிபெற்ற முதலாளிகளிருப்பது எவ்வளவு அவசியமோ அதேமாதிரி அந்நிய நாடுகளோடு செய்யும் வியவகாரத்தில சம்பாதித்தல் என்பது ஒரு நல்ல தேசீய உணர்ச்சி யென்று, ப்ராங்க்பர்ட் ஸீடங்க் என்பது சமீபத்தில் அறிவித்தது. தேர்ச்சி பெற்ற முதலாளிகளுள்ள ஸ்தாபனமானது தேசியப் பொதுவுடமையின் ஒரு விசேஷமான குணம். அதை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதிசெய்து பரவச் செய்யும்படி செய்துவிடலாம்.

---

## அயர்ன்கார்டு கிளர்ச்சியைப்பற்றிய விபரங்கள்.

## கொடுங்கொலை.

## ஆண், பெண், பாலர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள்.

டெயிலி டெலிகிராப் சோபியர (Sofia) நிருபர் தந்திமூலம் தெரிவிப்பது.

ருமேனியாவில் அயர்ன்கார்டு அட்டூழியங்களைப்பற்றி வெளி உலகக்கு இதுதான் முதன் முதலாக நேரில் பார்த்தவர்கள் மூலம் கிடைத்த சமாசாரம் என்று நினைக்கிறேன். புகாரெஸ்ட் சென்சார்ஷிப்பினால் எந்த சமாசாரமும் அடித்து விடப்படுவதால் நான் இந்த சமாசாரத்தை வெளி உலகுக்குச் சொல்ல சோபியாவிற்கு வரவேண்டியாதாயிற்று.

நடப்புக்கதையோ மிகவும் கொடுமையானது: ருமேனியா தேசத்திலும் மற்ற தேசங்களிலாகட்டும் இதற்குமுன் நடைபெறாத பைசாசத்தனமான கொடுமை. புகாரெஸ்டில் மட்டில் 4,000-க்கு மேல் 6,000 வரை ஜனங்கள் கொல்லப்பட்டார்கள். ருமேனியா முழுவதிலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 9,000-க்கு மேல் 12,000 வரை ஆகிறது. இதுவும் மிலிடரி, போலீஸ், வைத்திய அதிகாரிகளுடன் பேசினதிலிருந்து குறைச்சலாக மதிப்பிடப் பட்டிருக்கிறது. அவர்களுக்கும் கூட்டிச்சொல்லவேணும் என்ற எண்ணமிருக்க இடமில்லை.

புகாரெஸ்டில் கொலையுண்ட நாலாயிரத்தில் சுமார் 2,000 கலகக்காரர்களான கார்டுகளும், 600 சிப்பாய்களும், 1,400 சாதாரணமனுஷ்யர்களும். அந்த 1,400-ல் சுமார் 1,000 வரை யூதர்வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஒரு அயர்ன்கார்டு படையால் கொல்லப்பட்ட சமயத்திலே மற்றொரு அயர்ன்கார்டுபடை காக்கி உடைதரித்த ருமேனிய சிப்பாய் படையோடு ஊரின் நடுப்பிரதேசத்தில் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். யூதர்களில் பலர், ஆண் பெண்கள் குழந்தைகள் உள்பட பலபேர்கள் அப்படியே உயிரோடு எரிக்கப்பட்டார்கள். கலகக்கார அயர்ன்கார்ட்டுகளால் கொளுத்தப்பட்ட கட்டடங்களில் அகப்பட்டுக்கொண்டு சாகும்படி எரிந்துபோன நூற்றுக்கணக்கானவர்களைச் சொல்லவில்லை. ஆனால் தனிப்பட வீதியில் இழுக்கப்பட்டு உணர்ச்சியில்லாமல் போகும்வரை அடிக்கப் பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட பிறகு பெட்ரோலை அபிஷேகம் செய்து நெருப்பு வைக்கப்பட்டவர்களைப் பற்றிச் சொல்லுகிறேன்.

பங்கம் செய்யப்பட்ட பல கேஸ்களைப்பற்றி நம்பிக்கையான ஸ்நேகிதர்களும் சொல்லியிருப்பதை உத்தியோகஸ்தர்களும் ஆமோதிக்கிறார்கள்.

எல்லாவற்றிலும் ரொம்ப கொடுமையானது. சுமார் 200 யூதர்களை முனிஸிபல் மாடு அடிக்கும் சாலையில் கொண்டுபோய் வெட்டின சமாசாரமாகத் தோன்றுகிறது. யூதர்களை மாடு அடிக்கும்சாலைக்கு கிரீன் ஷர்டுக்காரர்கள் கொண்டுபோய் அவர்கள் உடுப்புகளை கழட்டி மாடு அடிக்கும் பட்டரையில் வைத்து கொடுமையான விதத்தில் கழுத்தை வெட்டிக்கொன்றார்கள். அப்படிக் கொன்றதும் யூதர்கள் பக்ஷிகளையும் கால்நடைகளையும் கொல்லும் புராதனமான வழக்கம் மாதிரியாம். 20, 30 பேரை அவ்விதம் கொன்றதும் களைத்துப்போய் பாக்கிப்பேர்கள், 40, 50 ஆயுதபாணியான லிஜனீரிஸ் சேர்ந்துகொண்டு கத்தி களாலும், எரியல்களாலும் சிறைச்சேதம் செய்துவிட்டார்கள். எண்ணிக்கையில் மேற்படி கொடுமையுடன் ஒப்பிடக்கூடிய மற்றொரு சம்பவம் ஜிலாவுக்குப் பக்கத்தில் ஒரு சாகுபடி நிலத்துக்கு 160 யூதர் தலைவர்களைக்கொண்டுபோய் ஒரேயடியாகச் சிறைச்சேதம் செய்ததாகும். மேற்படி தலைவர்கள் காலீடேஸ்டி என்னுமிடத்தில் மேற்படி யூதர்கள் ஜாதிக்குச் சொந்தமான ஒரு ஆபீஸில் அடைக்கப்பட்டிருந்தவர்கள்.

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### மெய்யோடு பொய்யைக் கலப்பது—வழக்கம்போல்.

குளிர் காலம் மாறி வரவர ஐரோப்பிய மேற்கு நாடுகளை பிரிடிஷ் விமானங்கள் பலமாய்ப் படையெடுக்க ஆரம்பித்துவிட்டதிலிருந்து ஜெர்மன் ரேடியோவும் வழக்கம்போல ஜெர்மன் நஷ்டத்தைக் குறைத்து, பிரிடிஷ் நஷ்டத்தை அதிகப் படுத்திக் காண்பிக்க ஆரம்பித்துவிட்டது. பிப்ரவரி மாதத்திய 3-ந்தேதி ஒலி பரப்பில் ஜனவரி 30-ல் லண்டனை பலமாகத் தகர்த்ததாகவும், படையெடுக்கச் சென்ற ஜெர்மன் விமானி ஒருவன் அதை வர்ணித்ததாகவும் பின்வரும் பொய்க் கதை சொல்லப்படுகிறது. விமானி வாலிபன், நேரம்—மாலை 7-மணி. உடுப்பு—மாரிகாலத்துக்குரிய, விமானச் சட்டை, போர்வை, பூஞ்சிறகு மூடிய ஜோடு, மூச்சுப் பை, நீந்த உடுப்பு, தோல் கை-மூடி. பிறகு பலமான விருந்து போஜனம்; அதன் பிறகு வெகுவேகமாய் லண்டனுக்குப் பறந்துவந்து, சோதனை தீபங்களுக் கும், நில பீரங்கிகளுக்கும் அஞ்சாது கனத்த குண்டுகளை மேகங்கள் வழியே வீச, அதன் ஓசையைக் கேட்டுக்கொண்டு லண்டன் தீப்பிடித்தெரிந்ததை பார்த்து விட்டு 15° குளிரில் பத்திரமாய் வாலிபன் திரும்பினான். இதுதான் கட்டுக்கதை.

இந்தக் கதை நன்றாயிருப்பதில் ஆக்ஷேபணையில்லை, ஆனால் இதில் மூன்று பொய்களிருப்பதுதான் நன்றாயில்லை. 1. மேற்கண்ட உடுப்புகளோடு பலத்த சாப்பாடு செய்துகொள்ள முடியாது. 2. விமான-என்ஜின் ஓசையில் குண்டுகள் வேட்டுகாதில்படாது. 3. ஜனவரி 30, வியாழக்கிழமையன்று ஜெர்மன் விமானங்கள் லண்டனுக்கோ வேறு பிரிடனில் எந்த பாகத்துக்குமோ வரவே இல்லை.

### இதுவும் பிரிடன் செய்யும் சதியாம்.

சமீபத்தில் ஜொகான்ஸ்பர்க்கில் தென்-ஆபிரிக்க சிப்பாய்களுக்கும் யுத்த விரோத விபரீதக் கக்ஷிக்கும் நடந்த கலகத்தை பிரிடன்தான் கிளப்பிவிட்டதாம், (இதாலி ரேடியோ பிப்ரவரி 3-ல்). இது யுத்தமே கூடாதென்று சொல்லும் கக்ஷியை அடக்கச்செய்த யுக்தியாம். இது நடந்தது தென்-ஆப்பிரிக்காவில். அதற்குத் தனித்த அரசாங்கமுண்டு. அவர்கள் போட்ட உத்தரவுக்கு பிரிடன் எப்படி பாத்தியப்படும். இதில் பிரிடனுக்குச் சம்பந்தமில்லை. மேலும், விபரீதக் கக்ஷிக்காரர்கள் சண்டைக்கு சைனியத்தை இழுத்தது உண்மையானாலும், உத்தர வில்லாது அவர்களைத் திருப்பி எதிர்த்தது தப்பென்று சிப்பாய்களை போயர் பிரதம மந்திரி ஜெனரல் ஸ்மட்ஸ் கண்டித்திருக்கிறார்.

ஜனநாயக அரசு நடக்கும் தென்-ஆபிரிக்காவில் இதாலியைப்போன்ற சர்வாதிகார நாட்டைப் போல கலகங்களை பரிபாலிக்க முடியாது. சட்டமும்,

அமைதியும், ஜனநாயகத்துக்கு முக்கியம். இவைகளை நாட்ட பாதுகாப்பு விதிகள் புதிதாக உண்டாக்கி அச்சு-நாடுகள் சார்பாக கலகம் நடக்காது. தென்-ஆபிரிக்கர்களின் ராஜவிசுவாஸம் குறையாதிருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதாலியின் வடபாகங்களில் சில தினங்களுக்கு முன் கலகங்கள் ஏற்பட்டன. இது பொய்யென்று இதாலி சாதிக்கிறது. அதற்காக, தென்-ஆபிரிக்கா கலகத்தை மறைப்பதற்காக வட-இதாலியில் கலகமென்று பிரிடன் கட்டி விட்டதென்று ஜெர்மனி ஒலிபரப்புகிறது. இதாலி கலகத்தைப்பற்றி பிரஸ்தாபம் ஜனவரி 26-ல் வெளியாயிற்று. தென்-ஆபிரிக்க சச்சரவு நடந்தது ஜனவரி 31-ல். 31-ம் தேதி சம்பவம் 26-ம் தேதிக் காரியத்தை எப்படி மறைக்கும்?

இதெல்லாம் விந்தைதான்! மேலும், தென்-ஆபிரிக்கா வம்பை வட-இதாலிக் கலகத்தைக்கொண்டு எவ்விதம் மறைப்பது. தவிர இதற்கு பிரிடன் எவ்விதம் ஜவாப்பாகும்.

ஜெர்மானியருக்கும், இதாலிக்கும் விரோதமாக, சண்டையை நிறுத்தச் சொல்லி வட-இதாலியில் நடந்த கலகத்தைப்பற்றி முதற்செய்தி பிரிடனிலிருந்து வரவில்லை. பெல்கிரேடில் இருக்கும் இரண்டு அமெரிக்க நிருபர்களிடமிருந்து வெளி வந்தது. இதற்காக, யுகோஸ்லாவியா அரசாங்கம் ஜெர்மனிக்குப்பயந்து இந்த நிருபர்களைச் சிறிது சிக்ஷித்தது. ஆனால், சொன்னது பொய்யென்று மட்டும் சொல்லவில்லை.

## மறுபடியும் கவன்டிரியைப்பற்றித்தான் பேச்சு.

கவன்டிரியில் 500 டன் நிறையுள்ள குண்டுகளை ஒரே இரவில் போட்டு விட்டதால், திட்டம் போட்டிருந்தபடி அங்கே விமானங்களை பிரிடன் கட்ட முடியாமல் போய்விட்டதென்று ஒரு ஜெர்மன் விமானத்தலைவர் சொல்லுவதாக ஜெர்மன் ரேடியோ பிப்ரவரி 9-ல் ஒலிபரப்பியிருக்கிறது.

1. விமானம் கட்டுவது கவன்டிரியில் மட்டுமல்ல: இது அதற்கேற்பட்ட முக்கிய இடமுமில்லை,

2. ஜெர்மன் படையெடுப்பால் பிரிடிஷ் தொழிலொன்றும் அதிகமாகப் பழுதுபடவில்லையென்று பி. எம். பத்திரிகையின் லண்டன் நிருபரான மிஸ்டர் பென் ராபர்ட்ஸன் சொல்லியிருக்கிறார்.

3. கவன்டிரி விஷயமாகச்செய்திகளை வெளியிடக்கூடாதென்று தடை உத்திரவு போட்டதற்குக்காரணம் பழுதுக்குறைவாய் இருந்ததுதான்.

4. கவன்டிரியிலுள்ள ஆலயங்களும், கடைகளும், ஆஸ்பத்திரிகளும், வீடுகளும்தான் சேதமாயின.

5. இந்த மாதிரி எதிர்ப்பைப்பற்றிப் புகழ்ந்து கொள்ளுவதிலிருந்து ஜெர்மானியருக்கு வேறு வெற்றி ஒன்றும் சொல்லிக்கொள்ளுவதற்கு இல்லையென்று வெளியாகிறது.

## B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

### மற்றொரு ஏமாற்றப் பேச்சு.

யுத்தத்தை நிறுத்திவிட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் தாங்கள் வேலையை நிறுத்திவிடுவதாக பிரிடிஷ் தொழிலாளிகள் சொல்லிவிட்டதாக இதாலி இந்துஸ்தானியில் பிப்ரவரி 7-ம் தேதி ஒலிபரப்பியிருக்கிறது. வேலை நிறுத்தம் முதலிய தொழில் வம்புகள் இப்பொழுது குறைவாயிருப்பது போல இதுவரையில் பிரிடனில் இருந்ததில்லை. 'பிரிடிஷ் தொழிலாளிகள் உயிரோடு இருக்கும் வரையில் இதாலிய பாஸிஸ்ட் கக்ஷியார்கள் இங்கு தலைகாட்ட முடியாது. ஐரோப்பிய கண்டத்தில் வசிக்கும் தொழிலாளிகள் எங்களுடைய சகோதரர்களாவார்கள். அவர்கள் பாஸிஸ்ட் என்ற விஷக்காற்றில் அகப்பட்டுக்கொண்டு திக்குமுக்கடைந்திருக்கிறார்கள். மதப்போரைப்போலப் பாவித்து இந்த யுத்தத்தை பாஸிஸ்ட் கக்ஷி நிர்மூலமாகும் வரையில் பிரிடிஷ் தொழிலாளிகளின் ஒவ்வொரு பகுதியும் நடத்திக்கொண்டுபோகும் என்பதை எவரும் தெளிவாகத்தெரிந்துகொள்ளட்டும்' என்று 1940 ஆகஸ்ட் மாதத்திலேயே பிரிடிஷ் சுரங்கத்தொழிலாளிகள் சங்கத் தலைவரான மிஸ்டர் வில்லாதர் எடுத்துக்காட்டிவிட்டார்.

### நாஸிகளின் யுத்த நோக்கம்.

பிரிடன் யுத்தத்தை வென்ற பிறகுதான் தன்னுடைய யுத்த நோக்கத்தைத் தெரிவிப்பதாகச் சொல்லுகிறதென்று இதை ஒரு குற்றமாக பிப்ரவரி 5-ல் ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது.

ஆனால், 'ஜனசமூக க்ஷேமத்திற்காக 5—15-ம் நூற்றாண்டில் இருந்தபடி, மறுபடியும், அடிமைத்தனத்தைப் புனருத்தாரணம் செய்வதுதான் ஜெர்மனியின் யுத்த நோக்கமென்று' உயர்தர உத்தியோகஸ்தர்கள் முன்னிலையில் டாரே என்ற ஜெர்மன் விவசாய மந்திரி 1940-ம் ஸு மே மாதத்திலேயே சொல்லிவிட்டார்.

### பிரிடிஷ் விமானப்படை உயர்வா அல்லது ஜெர்மன் விமானப்படை உயர்வா?

பிப்ரவரி 6-ம் தேதி ஒலிபரப்பில் ஜெர்மனி தன்னுடைய விமானப்படை தான் உயர்வானதென்று சொல்லிக்கொள்ளுகிறது. ஆனால் இது நடப்புக்கு விரோதம். 1940-ம் வருஷத்தில் பிரிடன்மேல் படையெடுத்த ஜெர்மன் விமானங்களில் 2,993 சேதம்; பிரிடனுக்கு நஷ்டம் 847 தான். மேற்குப் போர்முனையிலும், பிரான்ஸிலும் 945 ஜெர்மன் விமானங்கள் சேதமாயின. இங்கே பிரிடனுக்கேற்பட்ட நஷ்டம் 375 தான். மேலும் 1941 ஜனவரியில் முஸோலினிக்கு உதவிசெய்ய மத்தியதரைக்கடலுக்கு வந்த ஜெர்மன் விமானங்களில் 184 நஷ்டமாயின. இங்கு பிரிடனுக்கு 14 விமானங்கள் தான் நஷ்டம்,

## வெற்றி பெறுவதற்காக விவசாய அபிவிருத்தி.

இங்கிலாந்தில் விளையாடுமிடங்களெல்லாம், விவசாயத்துக்கு மாற்றப் படுவதிலிருந்து ஜெர்மனி பிரிடனைச்சுற்றி முற்றுகைபோட்டுவிட்டதால் உணவுப் பொருள்கள் வெளியேயிருந்து வராதுபோய் உள்நாட்டிலேயே விளைவித்துக் கொள்ள நேரிட்டுவிட்டதாக பிப்ரவரி 5-ம் தேதியன்று ஜெர்மனி ஒலிபரப்பி யிருக்கிறது. பிரிடன் இப்பொழுது விவசாயத்தை அபிவிருத்திசெய்து கொண்டி ருப்பது உண்மை தான். கப்பல்களில் உணவுப்பொருள்களுக்குப் பதிலாக யுத்த தளவாடங்களைக் கொண்டுவருவதற்காக விவசாயத்தை பலப்படுத்துகிறது.

## முடிவாக.

'சண்டைக்கு கிரேக்கர்கள் அகப்படுகிறவரையில்தான் பிரிடன் சண்டையை நடத்தும்' என்று பிப்ரவரி 7-ம் தேதியன்று இதாலி ஒலிபரப்பியிருக்கிறது. கடைசி இதாலிக்காரன் ஒருவன் தலைகாட்டுகிறவரையில் பிரிடன் யுத்தம் செய்து தான்தீரும் என்று சொல்லியிருந்தால் உண்மையாயிருந்திருக்கும்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXXII.—(திருத்தப்பட்டது).

1941—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| பிப்ரவரி | 22, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 23, ஞாயிற்றுக்கிழமை. | பூவரசகுடி | ... | காலை | 9.15 |
| | | வேங்கடக்குளம் | ... | ,, | 9.45 |
| | | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | ,, | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | கொப்பனுபட்டி | ... | மாலை | 5.00 |
| | | பொன்னமராவதி | ... | ,, | 5.30 |
| | 25, செவ்வாய்க்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | ,, | 5.00 |
| | 26, புதன்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | பெருங்களூர் | ... | மாலை | 5.00 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 5.30 |
| | 27, வியாழக்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | அரிமளம் | ... | மாலை | 5.00 |
| | | கீழாநிலை | ... | ,, | 5.30 |
| | | சேரி பள்ளிக்கூடம் | ... | ,, | 5.30 |

## பிரஸங்கம் XXXIII.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்ச்சு ... | 1, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 2, ஞாயிற்றுக்கிழமை. | கீரனூர் | ... | காலை | 9.30 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 9.45 |
| | | திருவப்பூர் | ... | மாலை | 5.00 |
| | 3, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | செம்பாட்டூர் | ... | மாலை | 5.00 |
| | | ஒடையாளிப்பட்டி | ... | ,, | 5.45 |
| | 4, செவ்வாய்க்கிழமை. | வயலோகம் | ... | ,, | 5.00 |
| | | அன்னவாசல் | ... | ,, | 5.30 |
| | 5, புதன்கிழமை ... | பனையப்பட்டி | ... | ,, | 5.00 |
| | | ராங்கியம் | ... | ,, | 5.30 |
| | 6, வியாழக்கிழமை ... | புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம். | | ,, | 3.30 |
| | 7, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |

# முக்கியமான விளம்பரம்.

---

பிரிடிஷ் அரசாங்கத்தார் தயாரித்த
கியாதிபெற்ற

## "கால் கதி;
## பிரிடிஷ் விமானப்படை"

என்ற

யுத்த சம்பந்தமான பிலிம்
புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்
பிப்ரவரிமீ 24-ம் தேதி முதல் ஒரு வாரம்
காண்பிவிக்கப்படும்.

புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம் இதை
ஜனங்களுக்குச் சிபார்சு செய்கிறது.

இப்படம் புதுக்கோட்டையிலுள்ள
ஒவ்வொருவராலும்
அவசியம் பார்க்கப்படவேண்டியது.

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—22-2-41.